முன்னுரை

அப்போஸ்தலர் பவுல் தெசலோனிகேயருக்கு தன்னுடைய முதலாவது நிருபத்தை எழுதிய சிறிது காலத்திற்குப் பின்பு, இந்த இரண்டாவது நிருபத்தையும் எழுதுகிறார். இயேசுகிறிஸ்துவின் வருகை சமீபமாயிருக்கிறது. ஆனால் அவருடைய வருகையைக்குறித்து விசுவாசிகள் மத்தியில் தவறான உபதேசங்களை சிலர்பிரசங்கம் பண்ணுகிறார்கள். இந்த குழப்பமான சூழ்நிலையில், அப்போஸ்தலர் பவுல் தெசேலானிக்கேயருக்கு இரண்டாவது நிருபத்தை எழுதி, இயேசுகிறிஸ்துவின் வருகையைக்குறித்த உபதேசத்தைத் தெளிவுபடுத்துகிறார்.

இயேசுகிறிஸ்துவின் வருகை நிச்சயமாயிருக்கும். சீக்கிரத்திலிருக்கும். ஆனாலும் கர்த்தருடைய நாள் வருவதற்கு முன்பாக ஒரு சில காரியங்கள் நிறைவேறும். இது தேவனுடைய சித்தம். முன்னறிவிக்கப்பட்ட இந்த காரியங்கள் நிறைவேறும்போது, கர்த்தருடைய வருகையின்நாள் சமீபமாயிருக்கிறது என்பதை நாம் அறிந்துகொள்ளலாம்.

1 அதிகாரம்

அப்போஸ்தலர் பவுல் தெசலோனிக்கேயருக்கு வாழ்த்துதல் சொல்லுகிறார் (2தெச 1:1-4). தேவனுடைய ராஜ்யத்தினிமித்தம் தெசலோனிக்கேயர் அனுபவிக்கிற பாடுகளைக் குறித்து எழுதுகிறார். அவர்களுக்கு ஆலோசனையும் புத்தியும் சொல்லி அவர்களை ஆறுதல்பண்ணுகிறார் (2தெச 1:5-10). பவுல் தெசலோனிக்கேயருக்காக கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணுகிறார் (2தெச 1:11-12).

கிருபையும் சமாதானமும் 2தெச 1 : 1-4

2தெச 1:1. பவுலும், சில்வானும், தீமோத்தேயும், நம்முடைய பிதாவாகிய தேவனுக்குள்ளும், கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்குள்ளும் இருக்கிற தெசலோனிக்கேயர் சபைக்கு எழுதுகிறதாவது.

2தெச 1:2. நம்முடைய பிதாவாகிய தேவனாலும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும் உங்களுக்குக் கிருபையும் சமாதானமும் உண்டாவதாக.

2தெச 1:3. சகோதரரே, நாங்கள் எப்பொழுதும் உங்களுக்காக தேவனை ஸ்தோத்திரிக்கக் கடனாளிகளாயிருக்கிறோம்; உங்கள் விசுவாசம் மிகவும் பெருகுகிறபடியினாலும், நீங்களெல்லாரும் ஒருவரிலொருவர் வைத்திருக்கிற அன்பு அதிகரிக்கிறபடியினாலும், அப்படிச் செய்கிறது தகுதியாயிருக்கிறது.

2தெச 1:4. நீங்கள் சகிக்கிற சகல துன்பங்களிலும் உபத்திரவங்களிலும் பொறுமையையும் விசுவாசத்தையும் காண்பிக்கிறதினிமித்தம் உங்களைக் குறித்து நாங்கள் தேவனுடைய சபைகளில் மேன்மை பாராட்டுகிறோம்.

அப்போஸ்தலர் பவுல் தெசலோனிக்கேயருக்கு எழுதின முதலாவது நிருபத்தில் அவர்களை வாழ்த்தினதுபோலவே, இந்த இரண்டாவது நிருபத்திலும் அவர்களை வாழ்த்துகிறார். அவர்களை வாழ்த்துவதற்கு முதலாவது நிருபத்தில் பயன்படுத்தின அதே வார்த்தைகளையே இந்த நிருபத்திலும் பயன்படுத்துகிறார். மற்ற இடங்களில் சபைகள் ஸ்தாபிக்கப்பட்டிருப்பது போலவே, தெசலோனிக்கேயிலுள்ள சபையும், "பிதாவாகிய தேவனுக்குள்ளும், கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்குள்ளும்" ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது (2தெச 1:1).

அப்போஸ்தலர் பவுல் தெசலோனிக்கேய சபையார்மீது மிகுந்த அன்புவைத்திருக்கிறார். அவர்களுக்காக பவுலும் அவருடைய உடன்ஊழியரும் எப்பொழுதும் தேவனை ஸ்தோத்திரிக்கிறார்கள். தாங்கள் அவர்களுக்காக தேவனை ஸ்தோத்திரிக்க கடனாளிகளாயிருப்பதாக பவுல் சொல்லுகிறார் (2தெச 1:3).

கர்த்தர் நமக்கு செய்த எல்லா நன்மைகளையும் நினைத்து நாம் அவரை எப்பொழுதும் ஸ்தோத்திரிக்கவேண்டும். அவர் நமக்கு செய்த நன்மைகளுக்கு மாத்திரமல்ல, அவர் மற்றவர்களுக்கு செய்த செய்த நன்மைகளுக்காகவும் நாம் கர்த்தரை எப்பொழுதும் ஸ்தோத்திரிக்கவேண்டும். கர்த்தரை ஸ்தோத்திரம் பண்ணுவது நம்முடைய கடமை. கர்த்தரை ஸ்தோத்திரிக்க நாம் கடனாளிகளாயிருக்கிறோம்.

நாம் மற்ற விசுவாசிகளுக்காக கர்த்தரை ஸ்தோத்திரம்பண்ணும்போது, நாம் அவர்கள்மீதுள்ள அன்பையும் கரிசனையையும் வெளிப்படுத்துகிறோம். அது மாத்திரமல்ல, மற்ற விசுவாசிகளுக்காக கர்த்தரை ஸ்தோத்திரிப்பது நம்முடைய கடமையாகவும் இருக்கிறது. கர்த்தரை ஸ்தோத்திரிக்க நாம் கடனாளிகளாயிருக்கிறோம்.

அப்போஸ்தலர் பவுல் தெசலோனிக்கேயரைக் குறித்து தேவனுடைய சபையில் மேன்மை பாராட்டுகிறார் (2தெச 1:4). பவுல் ஒருபோதும் முகஸ்துதி பண்ணுவதில்லை. தேவையில்லாமல் தன்னுடைய சிநேகிதரைப் புகழ்ந்து பேசமாட்டார். ஆனாலும் தெசலோனிக்கேயரைக்குறித்து நலமான வார்த்தைகளைப் பேசுகிறார். அவர்களைக்குறித்து தேவனுடைய சபைகளில் மேன்மை பாராட்டுகிறார்.

தெசலோனிக்கேயருடைய விசுவாசத்தின் கிரியையையும், அவர்களுடைய அன்பின் பிரயாசத்தையும், கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மேலுள்ள அவர்களுடைய நம்பிக்கையின் பொறுமையையும், பவுல் பிதாவாகிய தேவனுக்கு முன்பாக இடைவிடாமல் நினைவுகூர்ந்து, தேவனை துதிக்கிறார் (1தெச 1:3). தெசலோனிக்கேயர் தேவ கிருபையில் பெருகியிருக்கிறார்கள். தேவனுடைய கிருபை எங்கெல்லாம் காணப்படுகிறதோ, அங்கெல்லாம் அது பெருகவேண்டும். தேவகிருபை எங்கெல்லாம் பெருகுகிறதோ அங்கெல்லாம் தேவனுடைய நாமம் மகிமைப்படுத்தப்படவேண்டும்.

கர்த்தர் தமது இரக்கத்தினாலும், தயவினாலும் தம்முடைய கிருபையை நமக்குக் கொடுத்திருக்கிறார். கர்த்தருடைய கிருபைக்காக, அவரை ஸ்தோத்திரிக்க நாம் கடனாளிகளாயிருக்கிறோம். தேவகிருபை நம்மிடத்தில் இன்னும் பெருகவேண்டும். நம்மிடத்தில் காணப்படுகிற தேவகிருபை மிகவும் கொஞ்சமாயிருக்கிறது என்றும், தேவகிருபை இப்போதுதான் நமக்கு வர ஆரம்பித்திருக்கிறது என்றும் நாம் புரிந்துகொள்ளவேண்டும்.

நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் ஏற்றதாழ்வுகள் இருக்கும். சந்தோஷமும் துக்கமும் கலந்திருக்கும். நாம் துக்கப்படும்போது எப்படி சந்தோஷப்படுவது என்று நமக்குத் தெரியாமல் போகலாம். எவ்வளவுதான் முயற்சி செய்தாலும் நம்முடைய துக்கம் சந்தோஷமாய் மாறாமல் போகலாம். தேவனுடைய கிருபையினால் மாத்திரமே நம்முடைய துக்கம் சந்தோஷமாய் மாறும். நம்முடைய துக்கத்தை எப்படி சந்தோஷப்படுத்துவது என்று நமக்குத் தெரியாமல் போனாலும், நம்முடைய சந்தோஷத்தை எப்படி இன்னும் அதிகரிக்கச் செய்வது என்று நமக்குத் தெரிந்திருக்கவேண்டும். துக்கத்திலிருந்து சந்தோஷத்திற்கு மாறுவது கடினம். சந்தோஷத்திலிருந்து அதிக சந்தோஷத்திற்கு மாறுவது எளிது.

தெசலோனிக்கேயருடைய விசுவாசம் மிகவும் பெருகுகிறது (2தெச 1:3). விசுவாசத்தின் பெருக்கம் விசுவாசத்தின் கிரியைகளில் வெளிப்படும். விசுவாசம் பெருகுகிறபோது, தேவனுடைய மற்ற கிருபைகளெல்லாம் கூடபெருகும். விசுவாசத்தின் வளர்ச்சிக்குத்தக்கபிரகாரம் கிருபையும் வளர்ச்சி பெறும்.

தெசலோனிக் கேயர் ஒருவரிலொருவர் வைத்திருக்கிற அன்பு அதிகரித்திருக்கிறது (2தெச 1:3). விசுவாசம் பெருகுகிறபோது அன்பும் அதிகரிக்கிறது. அவர்களுடைய பொறுமையும் அவர்களுடைய விசுவாசமும் பெருகுகிறது. எல்லா உபத்திரவங்களிலும், எல்லா துன்பங்களிலும் அவர்கள் பொறுமையையும் விசுவாசத்தையும் காண்பிக்கிறார்கள் (2தெச 1:4).

நமக்கு துன்பங்களும் உபத்திரவங்களும் வரும்போது பதறக்கூடாது. பொறுமையையும் விசுவாசத்தையும் காண்பிக்கவேண்டும். துன்பங்களையும் உபத்திரவங்களையும் பொறுமையோடு சகித்துக் கொள்ள வேண்டும். நாம் உபத்திரவங்களிலிருக்கும் போது நம்முடைய பொறுமையும் விசுவாசமும் புடமிடப்படும்.

துன்பங்களிலும் உபத்திரவங்களிலும் விசுவாசத்தைக் காத்துக்கொள்கிறவர்கள், அவற்றை பொறுமையோடு சகித்துக் கொள்வார்கள். துன்பங்களும் உபத்திரவங்களும் இயல்பாகவே நமக்கு வேதனையைத் தரும். ஆனாலும் இயேசு கிறிஸ்துவின் மீதுள்ள விசுவாசத்தினால், அவருடைய வார்த்தைகளை நம்பி, துன்பங்களையும் உபத்திரவங்களையும் பொறுமையோடு சகித்துக்கொள்ள வேண்டும். துன்பங்களிலும் உபத்திரவங்களிலும் நாம் சோர்ந்போய் விடக் கூடாது. தேவகிருபையினால் நம்முடைய சோர்வு நம்மைவிட்டு நீங்கவேண்டும். பரிசுத்த ஆவியானவர் நம்மைப் பெலப்படுத்த வேண்டுமென்று அவருடைய சமுகத்தில் விண்ணப்பம் பண்ணவேண்டும்.

உபத்திரவமும் இளைப்பாறுதலும் 2தெச 1 : 5-10

2தெச 1:5. நீங்கள் தேவனுடைய ராஜ்யத்தினிமித்தம் பாடு அநுபவிக்கிறவர்களாயிருக்க, அந்த ராஜ்யத்திற்கு நீங்கள் பாத்திரரென்றெண்ணப் படும்படிக்கு, தேவன் நியாயமான தீர்ப்புச் செய்கிறவரென்பதற்கு, அதுவே அத்தாட்சியாயிருக்கிறது.

2தெச 1:6. உங்களை உபத்திரவப் படுத்துகிறவர்களுக்கு உபத்திரவத்தையும், உபத்திரவப் படுகிற உங்களுக்கு எங்களோடேகூட இளைப்பாறுதலையும் பிரதிபலனாகக் கொடுப்பது தேவனுக்கு நீதியாயிருக்கிறதே.

2தெச 1:7. தேவனை அறியாதவர்களுக்கும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குக் கீழ்ப் படியாதவர்களுக்கும் நீதியுள்ள ஆக்கினையைச் செலுத்தும்படிக்கு,

2தெச 1:8. கர்த்தராகிய இயேசு தமது வல்லமையின் தூதரோடும், ஜுவாலித்து எரிகிற அக்கினியோடும், வானத்திலிருந்து வெளிப்படும்போது அப்படியாகும்.

2தெச 1:9. அந்நாளிலே தம்முடைய பரிசுத்தவான்களில்மகிமைப்படத்தக்கவராயும், நீங்கள் எங்களுடைய சாட்சியை விசுவாசித்தபடியினாலே உங்களிடத்திலும், விசுவாசிக்கிறவர்களெல்லாரிடத்திலும் ஆச்சரியப்படத் தக்கவராயும், அவர் வரும்போது,

2தெச 1:10. அவர்கள் கர்த்தருடைய சந்நிதானத்திலிருந்தும், அவருடைய வல்லமைபொருந்திய மகிமையிலிருந்தும் நீங்கலாகி, நித்திய அழிவாகிய தண்டனையை அடைவார்கள்.

கர்த்தருடைய பிள்ளைகள் இப்பிரபஞ்சத்தில் இப்போது பாடுகளை அனுபவித்தாலும், கர்த்தர் நமக்கு நித்திய சந்தோஷத்தை நியமித்திருக்கிறார். தேவனுடைய ராஜ்யத்தினிமித்தம் தெசலோனிக்கேயர் பாடு அனுபவிக்கிறார்கள். இவர்கள் பாடு அனுபவிப்பதன் மூலமாக, தேவனுடைய ராஜ்யத்திற்கு அவர்கள் பாத்திரரென்று எண்ணப்படுகிறார்கள்.

நம்முடைய விசுவாசம் நம்மைப் பெலப்படுத்துகிறது. தேவகிருபை நம்மை சந்தோஷப்படுத்துகிறது. கிறிஸ்துவின் உபதேசம் நமக்கு எல்லாவற்றிலும் போதுமானதாகயிருக்கிறது. நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து நமக்கு எல்லாவற்றிற்கும் எல்லாமுமாக இருக்கிறார்.

தேவவசனத்தை நாம் கேட்டு, அதை நம்முடைய இருதயத்தில் காத்துக்கொள்ள வேண்டும். தேவவசனம் விலையேறப் பெற்றது. அதன் மதிப்பை நாம் புரிந்து கொள்ளவேண்டும். தேவனுடைய ராஜ்யம் அதிக மேன்மையுள்ளது. தேவராஜ்யத்தின் மகிமையையும், மேன்மையையும் மகத்துவத்தையும் நாம் புரிந்துகொண்டால் தான், தேவனுடைய ராஜ்யத்தினிமித்தம் நம்மால் பாடுகளை அனுபவிக்க முடியும். நம்முடைய இருதயமும் பாடுகளை பொறுமையோடு சகித்துக்கொள்ளும். நாம் பாடுகளை அனுபவிக்கும்போது, அந்த ராஜ்யத்திற்கு நாம் பாத்திரவான்களென்று தேவனும் நம்மைக்குறித்து தீர்ப்பு செய்வார்.

தம்முடைய ராஜ்யத்தினிமித்தமாய் உபத்திரவப்படுகிறவர்களையும், உபத்திரவப் படுத்துகிறவர்களையும் கர்த்தர் பார்த்துக் கொண்டிருக்கிறார். அவருடைய கண்களுக்கு மறைவானது ஒன்றுமேயில்லை. தம்முடைய பிள்ளைகளை உபத்திரவப் படுத்துகிறவர்களுக்கு கர்த்தர் உபத்திரவத்தைக் கொடுப்பார். தம்முடைய ராஜ்யத்தினிமித்தம் உபத்திரவப்படுகிற தம்முடைய பிள்ளைகளுக்கோ இளைப் பாறுதலை பிரதிபலனாகக் கொடுப்பார். உபத்திரவப்படுத்து கிறவர்களுக்கு உபத்திரவத்தையும், உபத்திரவப்படுகிறவர்களுக்கு இளைப் பாறுதலையும் பிரதிபலனாகக் கொடுப்பது தேவனுக்கு நீதியாயிருக்கிறது (2தெச 1:6).

இப்பிரபஞ்சத்தில் மனுஷருடைய கிரியைகளுக்குத்தக்கதாக தேவன் தீர்ப்பு செய்கிறார். தீமை செய்கிறவர்களைத் தண்டிக்கிறார். நன்மை செய்கிறவர்களுக்கு வெகுமதி கொடுக்கிறார். உபத்திரவப்படுத்துகிற வர்களிடத்தில், உபத்திரவப்படுத்துகிற ஆவி கிரியை செய்கிறது. உபத்திரவப்படுத்துகிறவர்களுக்கு நித்திய அழிவு நியமிக்கப்பட்டிருக்கிறது. தேவன் நியாயமாய் நீதி செய்கிறவர். தேவன் தம்முடைய நீதியின்படி பிரதிபலன் கொடுக்கிறவர். தம்முடைய பிள்ளைகளை உபத்திரவப்படுத்துகிறவர்களுக்கு அவர் உபத்திரவம் கொடுப்பார். தம்முடைய ராஜ்யத்தினிமித்தம் உபத்திரவப் படுகிறவர்களுக்கு இளைப்பாறுதலைக் கொடுப்பார்.

கர்த்தருடைய பரிசுத்தவான்களுக்கு இளைப்பாறுதல் நியமிக்கப்பட்டிருக்கிறது. இப்பிரபஞ்சத்தின் பாவங்களிலிருந்தும், வருத்தங்களிலிருந்தும், வேதனை களிலிருந்தும், உபத்திரவங்களிலிருந்தும் கர்த்தருடைய பிள்ளைகளுக்கு நித்திய இளைப்பாறுதல் உண்டு. கர்த்தருடைய பிள்ளைகள் இப்பிரபஞ்சத்தில் இதுவரையிலும் அனுபவித்த எல்லா பாடுகளுக்கும், உபத்திரவங்களுக்கும், பிரதிபலனாக, அவர்களுக்கு நித்திய இளைப்பாறுதல் கொடுக்கப்படும்.

பரிசுத்தவான்கள் இளைப்பாறுதலில் பங்குபெறும்போது அவர்களுடைய கண்ணீர்கள் வற்றிப்போகும். அவர்களுடைய கவலைகள் நீங்கிப்போகும். வேதனைகளைப்பற்றிய நினைவுகூட அவர்களிடத்தில் இருக்காது. இப்பிரபஞ்சத்தில் இயேசுகிறிஸ்துவின் நாமத்தினிமித்தம், நாம் எதையாவது இழந்திருந்தாலும், அல்லது நாம் பாடுகளை அனுபவித்திருந்தாலும், அதற்கேற்ற பிரதிபலனை நாம் பரலோகத்தில் பெற்றுக்கொள்வோம். நமக்கு இளைப்பாறுதலை பிரதிபலனாகக் கொடுப்பது தேவனுக்கு நீதியாயிருக்கிறது.

தேவன் நீதிபரர். அவர் நீதியான காரியங்களை மாத்திரமே செய்கிறவர். கர்த்தருடைய பிள்ளைகள் உபத்திரவப்படும்போது அவர்கள் இப்பிரபஞ்சத்தில் எதையும் இழந்துபோவதில்லை. நம்முடைய உபத்திரவங்களினிமித்தமாய் நமக்கு ஒரு இழப்பும் உண்டாகாது. நம்மை உபத்திரவப்படுத்துகிற சத்துருவுக்கு ஒரு ஆதாயமும் கிடைக்காது. ஏனெனில் நாம் உபத்திரவப்பட்டதற்கு, நம்முடைய தேவன் இளைப்பாறுதலைப் பிரதிபலனாகக் கொடுத்து நீதி செய்கிறார்.

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து தமது வல்லமையின் தூதரோடும், ஜுவாலித்து எரிகிற அக்கினியோடும் வானத்திலிருந்து வெளிப்படுவார் (2தெச 1:8). அப்போது தேவனுடைய ராஜ்யத்தினிமித்தம் உபத்திரவப்படுகிற நமக்கு இளைப்பாறுதலைப் பிரதிபலனாகக் கொடுப்பார். தேவனை அறியாதவர்களுக்கும், இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குக் கீழ்ப் படியாதவர்களுக்கும், கர்த்தருடைய பிள்ளைகளை உபத்திரவப் படுத்துகிறவர்களுக்கும் அப்போது நீதியுள்ள ஆக்கினையைச் செலுத்துவார் (2தெச 1:7).

நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து வானத்திலிருந்து வெளிப்படுவார். தம்முடைய வல்லமையின் தூதரோடு வருவார். ஜுவாலித்து எரிகிற அக்கினியோடு வருவார். கர்த்தருடைய அக்கினி பரிசுத்த அக்கினி. இது புடமிடுகிற அக்கினி. கர்த்தருடைய அக்கினி அவருடைய பரிசுத்தவான்களை புடமிட்டு சுத்திகரிக்கிறது. கர்த்தருடைய பிள்ளைகளாகிய நம்மை, பரிசுத்த அக்கினி, கர்த்தருக்கு சுகந்த வாசனையுள்ள பலிகளாக மாற்றுகிறது. கர்த்தருடைய அக்கினி துன்மார்க்கருக்கு, அவர்களை பட்சித்துப் போடுகிற அக்கினியாக கிரியை செய்கிறது.

இயேசுகிறிஸ்து வானத்திலிருந்து வெளிப்படும்போது சிலருக்கு சந்தோஷமும் சிலருக்கு பயங்கரமான நடுக்கமும் உண்டாகும். இயேசுகிறிஸ்துவின் வருகை கர்த்தருடைய பிள்ளைகளாகிய நமக்கு மிகுந்த சந்தோஷத்தைத் தரும். துன்மார்க்கருக்கோ மிகுந்த பயத்தையும் நடுக்கத்தையும் தரும்.

தேவனை அறியாதவர்களுக்கு, கர்த்தருடைய நாள் சந்தோஷமாயிராது. இயேசுகிறிஸ்துவுக்குக் கீழ்ப்படியாமல் அவருக்கு விரோதமாக முரட்டாட்டம் செய்தவர்களுக்கு அவருடைய வருகையின்நாள் பயங்கரமான நாளாகயிருக்கும். கர்த்தருடைய நாளின் போது, துன்மார்க்கர் கர்த்தருடைய சந்நிதானத்திலிருந்தும், அவருடைய வல்லமை பொருந்திய மகிமையிலிருந்தும் நீங்கலாகி, நித்திய அழிவாகிய தண்டனையை அடைவார்கள் *(2தெச 1:10)*.

துன்மார்க்கர் தண்டிக்கப் படுவார்கள். அவர்களுடைய பாவத்தினி மித்தமாய் அவர்களுக்கு நித்திய அழிவு தண்டனையாகக் கொடுக்கப்படும். இப்பிர பஞ்சத்தில் துன்மார்க்கர் ஆசைஆசையாய் செய்த பாவங்களெல்லாம் கர்த்தருடைய நாளின் போது நியாயந்தீர்க்கப்படும். பாவத்தின் சம்பளம் மரணம். துன்மார்க்கர் தங்கள் பாவத்திற்குச் சம்பளமாக நித்திய அழிவைத் தண்டனையாக அடைவார்கள். நித்திய அழிவுக்குக் குறைவான தண்டனை துன்மார்க்கருக்கு இல்லை. துன் மார்க்கருடைய தண்டனை கர்த்தருடைய சந்நிதானத்திலிருந்து வரும். துன் மார்க்கருக்கு அழிவு கர்த்தருடைய வல்லமை பொருந்திய மகிமையிலிருந்து வரும். தேவனுடைய நீதியான நியாயத் தீர்ப்புக்கு துன்மார்க்கர் ஒருவரும் தப்பிப்போவதில்லை.

கர்த்தருடைய வருகையின்நாள் அவருடைய பரிசுத்தவான்களுக்கு சந்தோஷமான நாளாகயிருக்கும். இயேசு கிறிஸ்து, தம்முடைய வருகையின்நாளில், தம்முடைய பரிசுத்தவான்களில் மகிமைப்படத்தக்கவராயிருப்பார். அவரை விசுவாசிக்கிற எல்லாரிடத்திலும் இயேசுகிறிஸ்து ஆச்சரியப்படத் தக்கவராயிருப்பார் *(2தெச 1:9)*. இயேசு கிறிஸ்துவின் கிருபையும் வல்லமையும், அவருடைய பரிசுத்தவான்களின் இரட்சிப்பில் மகிமைப்படும்.

இயேசுகிறிஸ்துவினுடைய வருகையின் நாள் மகிமை நிறைந்த நாள். அந்த நாள் ஆச்சரியமான நாள். இயேசுகிறிஸ்துவின் நாமத்தை விசுவாசிகள் மகிமைப்படுத்துவார்கள். அவருடைய வருகையின்போது, அவரை விசுவாசிக் கிறவர்களெல்லோரும் ஆச்சரியப்படுவார்கள்.

கர்த்தர் தம்முடைய பிள்ளைகளை ஆசீர்வதிப்பதற்காக, அவர் மறுபடியும் இந்தப் பூமிக்கு வரப்போகிறார். அந்தநாளை கர்த்தருடைய பரிசுத்தவான் களெல்லோரும் ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். இந்தப் பூமியில் தேவனுடைய ராஜ்யத்தினிமித்தம் தங்களுக்கு உபத்திரவங்களும், பாடுகளும் வந்தாலும், அவற்றை விசுவாசத்தோடும், பொறுமையோடும் சகித்துக் கொள்கிறார்கள். தங்களுக்குக் கிடைக்கப் போகிற நித்திய இளைப்பாறுதலை எதிர் பார்த்து,உபத்திரவங்களையும் பாடுகளையும் பொறுமையோடு சகித்துக்கொள்கிறார்கள். கர்த்தருடைய வருகையின் நாளை ஆவலோடு எதிர்பார்த்து உபத்திரவங்களையும் பாடுகளையும் பொறுமையோடு சகித்துக்கொள்கிறார்கள்.

வேண்டிக்கொள்கிறோம்
2தெச 1 : 11,12

2தெச 1:11. ஆகையால், நம்முடைய தேவனும் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவும் அளிக்கும் கிருபையின்படியே, நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமம் உங்களிடத்திலும், நீங்கள் அவரிடத்திலும் மகிமைப்படும் பொருட்டாக;

2தெச 1:12. நம்முடைய தேவன் உங்களைத் தமது அழைப்புக்குப் பாத்திரராக்கவும், தமது தயையுள்ள சித்தம் முழுவதையும் விசுவாசத்தின் கிரியையையும் பலமாய் உங்களிடத்தில் நிறைவேற்றவும் வேண்டுமென்று, எப்பொழுதும் உங்களுக்காக வேண்டிக்கொள்ளுகிறோம்.

அப்போஸ்தலர் பவுல் தெசலோனிக்கேயருக்காக இடைவிடாமல் கருத்தாய் ஜெபம்பண்ணுகிறார். நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து தம்முடைய கிருபையின் கிரியையை நமக்குள் ஆரம்பித்திருக்கிறார். நம்முடைய தேவனே நம்மை அழைத்தவர். தம்முடைய அழைப்புக்கு அவரே நம்மை பாத்திரராக்கவேண்டும். அதற்காக நாம் கர்த்தருடைய சமுகத்தில் எப்பொழுதும் வேண்டிக்கொள்ள வேண்டும். இதற்காகவே, அப்போஸ்தலர் பவுல் தெசலோனிக்கேயருக்காக, எப்பொழுதும் வேண்டிக்கொள்கிறார் (2தெச 1:12).

தேவன் நம்மை அழைத்திருப்பது நமக்குக் கிடைத்திருக்கிற மிகப்பெரிய சிலாக்கியம். அந்த தெய்வீக அழைப்புக்கு நாம் பாத்திரராயிருக்க வேண்டும். தேவன் தாமே தம்முடைய அழைப்புக்கு நம்மை பாத்திரராக்குகிறவர். தேவன் நம்மை அழைத்திருக்கும்போது, அவருடைய அழைப்புக்கு நாம் பாத்திரராயிருக்க வேண்டுமென்பதே நம்முடைய பிரதான கரிசனையாயிருக்க வேண்டும். இதற்காக எப்பொழுதும் கர்த்தரிடத்தில் வேண்டிக்கொள்ள வேண்டும் (2தெச 1:12).

தேவன் தம்முடைய நல்ல கிரியையை நமக்குள் ஆரம்பித்து வைத்திருக்கிறார். தேவன் தம்முடைய தயவுள்ள சித்தத்தையும், விசுவாசித்தின் கிரியையையும் நமக்குள் துவக்கியிருக்கிறார். நமக்குள் இவற்றை ஆரம்பித்து வைத்தவர், தமது தயவுள்ள சித்தம் முழுவதையும், விசுவாசத்தின் கிரியையையும் பலமாய் நமக்குள் நிறைவேற்றுவார் (2தெச 1:12).

தேவன் தம்முடைய ஜனங்களிடத்தில் கிருபை நிறைந்தவராகயிருக்கிறார். தம்முடைய கிருபையுள்ள சித்தத்தையும் விருப்பத்தையும் தம்முடைய பிள்ளைகளிடத்தில் நிறைவேற்றுகிறார். தேவனுடைய தயவுள்ள சித்தமும், அவருடைய விசுவாசத்தின் கிரியையும் தெசலோனிக்கேயரிடத்தில் நிறைவேற வேண்டுமென்று பவுல் அவர்களுக்காக எப்போதும் வேண்டிக்கொள்கிறார். தேவனே இவற்றை நமக்குள் பலமாய் நிறைவேற்றுகிறவர்.

இயேசுகிறிஸ்துவின் நாமம் அவருடைய பிள்ளைகளாகிய நம்மிடத்தில் மகிமைப்படவேண்டும். நாமும் அவரிடத்தில் மகிமைப்படவேண்டும். நம்முடைய நற்கிரியைகள் மனுஷருக்கு முன்பாக பிரத்தியட்சமாயிருக்க வேண்டும். ஜனங்கள் அதைப்பார்த்து கர்த்தரை மகிமைப்படுத்தவேண்டும். இதன் மூலமாய் இயேசுகிறிஸ்துவின் நாமம் நம்மிடத்திலும், நம்மூலமாயும் மகிமைப்படும் (2தெச 1:11). தேவனுடைய நாமத்தை நாம் மகிமைப்படுத்தும்போது, நாமும் அவரிலும் அவர் மூலமாயும் மகிமைப்படுத்தப்படுவோம்.

2 அதிகாரம்

இயேசுகிறிஸ்துவின் இரண்டாம் வருகையைக்குறித்து ஒரு சிலரிடத்தில் தப்பிதமான சிந்தனைகள் இருக்கிறது. இதனால் சிலர் சஞ்சலப்பட்டு கலங்குகிறார்கள் (2தெச 2:1-3). இயேசுகிறிஸ்துவின் வருகையின்போது நடைபெறுகிற அடையாளங்களை பவுல் விவரித்துச் சொல்லுகிறார். கேட்டின் மகனாகிய பாவமனுஷன் வெளிப்படுவதைப் பற்றியும் பவுல் விவரிக்கிறார் (2தெச 2:4-12). விசுவாசிகள் தங்கள் ஆவிக்குரிய ஜீவியத்தில் நிலைகொண்டிருக்கவேண்டும் என்று பவுல் புத்திசொல்லுகிறார் (2தெச 2:13-15). பவுல் தெசலோனிக்கேயருக்காக கர்த்தரிடத்தில் விண்ணப்பம் செய்து இந்த அதிகாரத்தை நிறைவுசெய்கிறார்.

கிறிஸ்துவினுடைய நாள் 2தெச 2 : 1-3

2தெச 2:1. அன்றியும், சகோதரரே, நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் வருகையையும், நாம் அவரிடத்திலே சேர்க்கப்படுவதையுங்குறித்து, நாங்கள் உங்களை வேண்டிக்கொள்ளுகிறது என்னவென்றால்,

2தெச 2:2. ஒரு ஆவியினாலாவது, வார்த்தையினாலாவது, எங்களிடத்திலிருந்து வந்ததாய்த் தோன்றுகிற ஒரு நிருபத்தினாலாவது, கிறிஸ்துவினுடைய நாள் சமீபமாயிருக்கிறதாகச் சொல்லப்பட்டால், உடனே சஞ்சலப்படாமலும் கலங்காமலும் இருங்கள்.

2தெச 2:3. எவ்விதத்தினாலும் ஒருவனும் உங்களை மோசம்போக்காதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்; ஏனெனில் விசுவாச துரோகம் முந்தி நேரிட்டு, கேட்டின் மகனாகிய பாவமனுஷன் வெளிப்பட்டாலொழிய, அந்த நாள் வராது.

இயேசுகிறிஸ்துவின் வருகையைப் பற்றி அப்போஸ்தலர் பவுல் தெசலோனிக்கேயருக்கு எழுதுகிறார். ஆனால் தெசலோனிக்கேயரில் சிலர் பவுலின் உபதேசத்தை தப்பிதமாகப் புரிந்து கொள்கிறார்கள். இயேசுகிறிஸ்துவின் வருகை சீக்கிரமாயிருக்கும். ஆனால் தெசலோனிக்கேயரோ அது உடனடியாக வரும் என்று தப்பிதமாக நினைத்து தங்களுக்குள்ளே சஞ்சலப்பட்டு கலங்குகிறார்கள்.

அப்போஸ்தலர் பவுல் அவர்களுடைய தப்பிதங்களைக் கவனமாகத் திருத்துவதற்கு முயற்சி செய்கிறார். விசுவாசிகள் மத்தியில் ஆவிக்குரிய சந்தேகங்களும், உபதேசத்தில் தப்பிதங்களும் காணப்பட்டால், அதை உடனடியாக தீர்த்து வைப்பதற்கு முயற்சி மேற்கொள்ளவேண்டும். சில சமயங்களில் நம்முடைய வார்த்தைகளினாலும், செய்கைகளினாலும் சில தப்பிதங்கள் ஏற்படுவதற்கு வாய்ப்புள்ளது. இப்படிப்பட்ட தப்பிதங்களை நாம் உடனே நிவிர்த்தி செய்துவிடவேண்டும். நமக்குக் கிடைக்கிற எல்லா வாய்ப்புக்களையும் பயன்படுத்தி தப்பிதங்களை சரிசெய்துவிடவேண்டும்.

ஒரு சிலர் வேதவாக்கியத்திலிருந்து தப்பிதமான உபதேசத்தைப் போதிப்பார்கள். சாத்தான் இப்படிப்பட்டவர்களை விசுவாசிகளுக்கு எதிராக பயன்படுத்துகிறான். இவர்கள் சத்தியத்தைப் புரட்டுவார்கள். வசனங்களை சத்தியமாய் வியாக்கியானம் பண்ணுவதற்குப் பதிலாக, தங்களுடைய சொந்த விருப்பங்களையும், எண்ணங்களையும் உறுதி பண்ணுவதற்காக, சத்தியங்களை தப்பிதமாய் வியாக்கியானம் பண்ணுவார்கள்.

அப்போஸ்தலர் பவுல் தெசலோனிக்கேயர்மீது மிகவும் அன்பாகவும், கரிசனையாகவும் இருக்கிறார். அவர்களை, "சகோதரரே" என்று அன்போடு அழைக்கிறார். ஒரு தகப்பன் தன் பிள்ளைகளுக்கு நல்ல புத்திமதிகளும், ஆலோசனைகளும் சொல்லுவதுபோல, பவுல் அவர்களுக்கு ஆலோசனை சொல்லுகிறார். பிறருக்குப் புத்திசொல்லுவதில் நாம் பவுலின் முன்மாதிரியைப் பின்பற்றவேண்டும். ஒரு சிலர் தவறு செய்யும்போது, அந்த தவறுகளிலிருந்து அவர்களைத் திருத்துவதற்கு அன்பாய் முயற்சிபண்ணவேண்டும். நம்முடைய முயற்சியில் அன்பும் கரிசனையும் நிரம்பியிருக்கவேண்டும். தவறு செய்தவர்கள் திருந்தவேண்டும் என்பதே நம்முடைய பிரதான நோக்கமாயிருக்கவேண்டும். அவர்களை கடின வார்த்தைகளினால் அதிகமாய்க் கடிந்து, அவர்களை நமக்கு சத்துருக்களாக்கி விடக்கூடாது.

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து இந்த உலகத்தை நியாயந்தீர்ப்பதற்காக மறுபடியும் வருவார் என்பது நிச்சயமான சத்தியம். இயேசுகிறிஸ்துவினுடைய வருகையின்நாள் எப்போது இருக்குமென்று நமக்கு உறுதியாய்த் தெரியாது. அவருடைய வருகையில் காலதாமதம் உண்டாகலாம். ஒருவேளை, நாம் எதிர்பார்ப்பதற்கு முன்பாகவே அவர் வந்துவிடலாம். அவருடைய வருகையின்நாள் எப்போது இருக்குமென்று நமக்கு உறுதியாய்த் தெரியாவிட்டாலும், அவர் உறுதியாய் வருவார் என்பதை நாம் தெளிவாய்த் தெரிந்திருக்கவேண்டும். அவருடைய வருகையை நாம் எதிர்பார்த்தாலும், எதிர்பார்க்காவிட்டாலும், இயேசு கிறிஸ்துவின் வருகை நிச்சயம் நடைபெறும்.

இயேசுகிறிஸ்துவின் வருகையின் போது, அவருடைய பரிசுத்தவான்களெல்லாரும் அவரிடத்தில் சேர்க்கப்படுவார்கள். அந்நாளிலே பரிசுத்தவான்களின் சந்தோஷம் பரிபூரணமாகயிருக்கும். இது மிகப்பெரிய கூடுகை. இந்தக் கூட்டத்தில் இயேசுகிறிஸ்துவின் பரிசுத்தவான்கள் மாத்திரமே இருப்பார்கள். பழைய ஏற்பாட்டுக் காலத்து பரிசுத்தவான்களும் புதிய ஏற்பாட்டுக் காலத்து பரிசுத்தவான்களும் இயேசுகிறிஸ்துவின் வருகையின்போது, அவரிடத்தில் கூட்டிச் சேர்க்கப்படுவார்கள்.

எல்லா பரிசுத்தவான்களின் ஐக்கியத்திற்கும் இயேசுகிறிஸ்துவே ஆதாரமாகயிருக்கிறார். அவரே ஐக்கியத்தின் மையமாகயிருக்கிறார். நாமெல்லோரும் இயேசு கிறிஸ்துவிடத்திலேதான் கூட்டிச் சேர்க்கப்படுகிறோம். கிறிஸ்துவினிடத்தில் கூட்டிச் சேர்க்கப்படுகிற நாம், அவரோடுகூட நித்தியகாலமாயிருப்போம். அவருடைய சமுகத்தில் நமக்கு நித்திய சந்தோஷம் உண்டு.

இயேசுகிறிஸ்துவின் வருகையைக் குறித்து தெசலோனிக்கேயர் வஞ்சிக்கப்படக்கூடாது. கிறிஸ்துவின் நாளைக்குறித்த சத்தியத்தில் யாரும் அவர்களை மோசம் போக்கிவிடக்கூடாது. தங்களுக்கு கிறிஸ்துவின்நாள் சமீபமாயிருக்கிறதாக சொல்லப்பட்டால், தெசலோனிக்கேயர் உடனே சஞ்சலப்படக்கூடாது. கலங்கக்கூடாது. நமக்குள் தப்பிதமான சிந்தனைகள் வரும்போது நம்முடைய விசுவாசம் பலவீனப்படும். பலவீனமான இருதயம் நம்முடைய மனதை பலவீனப்படுத்தும். முடிவில் நம்முடைய மனது எளிதில் வஞ்சிக்கப்படும். நம்முடைய விசுவாசம் பலவீனமாயிருக்கும்போது சத்துரு நம்மை எளிதில் மோசம் போக்கிவிடுவான். ஆகையினால் விசுவாசிகள் எவ்விதத்திலும், தங்களை ஒருவனும் மோசம்போக்காத படிக்கு எச்சரிக்கையாயிருக்கவேண்டும்.

கர்த்தருடைய பரிசுத்தவான்களை மோசம்போக்குவதற்கு அநேகர் எழும்பியிருக்கிறார்கள். நம்மை வஞ்சிப்பதற்கு அநேகர் வஞ்சக எண்ணத்தோடு காத்துக் கொண்டிருக்கிறார்கள். சத்துரு நம்மை வஞ்சிப்பதற்கு பலவிதமான வழிகளைப் பயன்படுத்துவான். ஆகையினால் நாம் வஞ்சிக்கப்படாதபடிக்கு மிகுந்த எச்சரிப்போடிருக்கவேண்டும். ஒருவனும் நம்மை மோசம்போக்கி விடாதபடிக்கு நாம் தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தைத் தரித்துக்கொள்ள வேண்டும்.

இயேசுகிறிஸ்துவின் இரண்டாம் வருகை அப்போஸ்தலருடைய நாட்களிலேயே வரும் என்று ஒரு சிலர் தீவிரமாக உபதேசம் செய்தார்கள். அவர் உடனே வந்துவிடுவார் என்று சொல்லி விசுவாசிகளின் இருதயத்தை சஞ்சலப்படுத்தினார்கள். அவர்களுடைய மனதை கலங்கச் செய்தார்கள். இப்படிப்பட்ட துர்உபதேசங்களுக்கு விரோதமாக தெசலோனிக்கேயர் எச்சரிக்கையோடிருக்க வேண்டுமென்று பவுல் அவர்களுக்கு ஆலோசனை சொல்லுகிறார். பவுல் அவர்களை எச்சரிக்கிறார். அவர்களுக்கு எச்சரிப்பின் வார்த்தைகளைச் சொல்லுகிறார். பவுலின் எச்சரிப்பு வார்த்தையினால் தெசலோனிக்கேயரின் விசுவாசம் பலவீனப்பட்டுப்போகாது. அவர்களுடைய விசுவாசத்தை பலவீனப்படுத்துவது பவுலின் நோக்கமல்ல.

இயேசுகிறிஸ்துவின் இரண்டாம் வருகையைக்குறித்து தெசலோனிக்கேயர் உறுதியில்லாதவர்களாக இருக்கிறார்கள். இந்தச் சத்தியத்தில் தெளிவில்லாமல் அவர்களுடைய மனது அலைபாய்ந்து கொண்டிருக்கிறது. இயேசுகிறிஸ்துவின் வருகை அவருடைய பரிசுத்தவான்களெல்லோருக்கும் மிகவும் முக்கியமான சத்தியம். நம்முடைய விசுவாசத்திற்கும் நம்பிக்கைக்கும் இயேசுகிறிஸ்துவின் இரண்டாம் வருகையே ஆதாரம். சத்துரு இந்த முக்கியமான சத்தியத்தை விசுவாசிகள் மத்தியிலே புரட்டுகிறான். ஆகையினால் கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் அவருடைய வருகையைக் குறித்து மிகவும் எச்சரிப்பாகவும், அதே வேளையில் மிகவும் கவனமாகவும் இருக்கவேண்டும்.

கள்ளஉபதேசங்கள் வேகமாக வீசுகிற காற்றைப்போன்றது. கடலில் பலத்த காற்று வீசும்போது அலைகள் நிலையில்லாமல் அங்கும் இங்குமாக ஓடும். அதுபோலவே நம்முடைய இருதயத்திற்குள் கள்ளஉபதேசம் வாசம்பண்ணும்போது, நம்முடைய மனது நிலையில்லாமல் அலைபாயும். நிலையில்லாத விசுவாசிகள் நிலையில்லாத தண்ணீரைப்போல இருக்கிறார்கள். காற்று எந்தப் பக்கம் வீசுகிறதோ அந்தப் பக்கமாக அலையை அனுப்புகிற தண்ணீரைப்போல இருக்கிறார்கள்.

சத்துரு விசுவாசிகளுக்கு தவறுதலான எச்சரிப்பைக் கொடுக்கிறான். விசுவாசத்தில் உறுதியாயிருக்கிறவர்களை சஞ்சலப்படுத்துகிறான். அவர்களைக் கலங்கப்பண்ணுகிறான். இயேசு கிறிஸ்துவின் வருகை அவருடைய பரிசுத்தவான்களுக்கு நம்பிக்கையையும் சந்தோஷத்தையும் தருகிறது. இயேசுகிறிஸ்துவின் வருகையின் நாளை நாம் விழித்திருந்து எதிர்பார்க்கவேண்டும். அந்த நாளுக்காக ஜெபத்தோடு காத்திருக்கவேண்டும். அதே வேளையில் இயேசுகிறிஸ்துவின் வருகையைக்குறித்து, நம்முடைய மனதை சஞ்சலப்படுத்தும் கள்ள உபதேசங்களுக்கும் நாம் எச்சரிக்கையாயிருக்க வேண்டும். கிறிஸ்துவின் வருகையைப்பற்றிய சிந்தனை கர்த்தருடைய பிள்ளைகளாகிய நமக்கு நம்பிக்கையையும், ஆறுதலையும், சந்தோஷத்தையும் தரவேண்டும். அது நம்முடைய மனதை ஒருபோதும் சஞ்சலப்படுத்தக் கூடாது. இயேசுகிறிஸ்துவின் வருகையை நினைத்து நாம் கலங்கிப்போய்விடக்கூடாது.

அக்கிரமக்காரன்
2தெச 2 : 3-12

2தெச 2:3. எவ்விதத்தினாலும் ஒருவனும் உங்களை மோசம்போக்காதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்; ஏனெனில் விசுவாச துரோகம் முந்தி நேரிட்டு, கேட்டின் மகனாகிய பாவமனுஷன் வெளிப்பட்டாலொழிய, அந்த நாள் வராது.

2தெச 2:4. அவன் எதிர்த்து நிற்கிறவனாயும், தேவனென்னப்படுவதெதுவோ, ஆராதிக்கப்படுவதெதுவோ, அவை எல்லாவற்றிற்கும் மேலாகத் தன்னை உயர்த்துகிறவனாயும், தேவனுடைய ஆலயத்தில் தேவன் போல உட்கார்ந்து, தன்னைத்தான் தேவனென்று காண்பிக்கிறவனாயும் இருப்பான்.

2தெச 2:5. நான் உங்களிடத்திலிருந்தபோது இவைகளைச் சொன்னது உங்களுக்கு ஞாபகமில்லையா?

2தெச 2:6. அவன் தன் காலத்திலே வெளிப்படும்படிக்கு, இப்பொழுது அவனைத் தடை செய்கிறது இன்னதென்றும் அறிந்திருக்கிறீர்களே.

2தெச 2:7. அக்கிரமத்தின் இரகசியம் இப்பொழுதே கிரியைசெய்கிறது; ஆனாலும் தடைசெய்கிறவன் நடுவிலிருந்து நீக்கப்படுமுன்னே அது வெளிப்படாது.

2தெச 2:8. நீக்கப்படும்போது, அந்த அக்கிரமக்காரன் வெளிப்படுவான்; அவனைக் கர்த்தர் தம்முடைய வாயின் சுவாசத்தினாலே அழித்து, தம்முடைய வருகையின் பிரசன்னத்தினாலே நாசம்பண்ணுவார்.

2தெச 2:9. அந்த அக்கிரமக்காரனுடைய வருகை சாத்தானுடைய செயலின்படி சகல வல்லமையோடும் அடையாளங்களோடும் பொய்யான அற்புதங்களோடும்,

2தெச 2:10. கெட்டுப்போகிறவர்களுக்குள்ளே அநீதியினால் உண்டாகும் சகலவித வஞ்சகத்தோடும் இருக்கும். இரட்சிக்கப்படத்தக்கதாய்ச் சத்தியத்தின்மேலுள்ள அன்பை அவர்கள் அங்கிகரியாமற் போனபடியால் அப்படி நடக்கும்.

2தெச 2:11. ஆகையால் சத்தியத்தை விசுவாசியாமல் அநீதியில் பிரியப்படுகிற யாவரும் ஆக்கினைக்குள்ளாக்கப்படும்படிக்கு,

2தெச 2:12. அவர்கள் பொய்யை விசுவாசிக்கத் தக்கதாகக் கொடிய வஞ்சகத்தைத் தேவன் அவர்களுக்கு அனுப்புவார்.

இயேசுகிறிஸ்துவின் வருகைக்கு முன்பாக ஒரு சில சம்பவங்கள் நடைபெறும். அப்போஸ்தலர் பவுல் அந்தச் சம்பவங்களை தெசலோனிக்கேயருக்கு விவரித்துச் சொல்லுகிறார். தெசலோனிக்கேயர் மத்தியிலே உபதேசிக்கப்பட்டிருக்கிற துர்உபதேசங்களுக்கு விரோதமாக பவுல் அவர்களுக்குப் புத்திசொல்லுகிறார்.

இயேசுகிறிஸ்துவின் வருகைக்கு முன்பாக விசுவாச துரோகம் முந்தி நேரிடும். இது பொதுவான விசுவாச துரோகம். விசுவாச துரோகம் நேரிடும்போது கேட்டின் மகனாகிய பாவமனுஷன் வெளிப்படுவான் (2தெச 2:3). இந்தச் சத்தியத்தைப்பற்றி பவுல் அவர்களோடிருந்தபோது ஏற்கெனவே சொல்லியிருக்கிறார் (2தெச 2:5). இந்த உலகத்தில் கிறிஸ்தவ உபதேசமும், கிறிஸ்துவின் சபையும் ஸ்தாபிக்கப்பட்ட நாளிலிருந்து, சத்துரு அதற்கு விரோதமான உபதேசத்தையும் கொடுக்க ஆரம்பித்துவிட்டான்.

கிறிஸ்தவ உபதேசம் வேரூன்றி வளர்ச்சி பெற்றபோது, சத்துருவின் துர்உபதேசம் சபைக்கு விரோதமாக அதிகரித்திருக்கிறது. பழைய ஏற்பாட்டுக் காலத்திலும், கர்த்தருடைய பரிசுத்தவான்களுக்கு விரோதமாகவும், தேவாலயத்திற்கு விரோதமாகவும் சத்துருவின் கிரியை அதிகமாயிருந்தது. அந்த சத்துரு புதிய ஏற்பாட்டுக் காலத்திலும் ஓய்வில்லாமல் கிரியை செய்கிறான். இக்காலத்தில் தன்னுடைய துர்உபதேசத்தினால் சபையிலுள்ள விசுவாசிகளை சஞ்சலப்படுத்துகிறான். அவர்களைக் கலங்கச் செய்கிறான். சபைக்குள்ளே துர்உபதேசத்தைக் கொடுக்கிறான்.

அப்போஸ்தலர் பவுல் கேட்டின் மகனாகிய பாவமனுஷனைப்பற்றி விவரிக்கிறார். அந்த அக்கிரமக்காரன் எப்பொழுது வெளிப்படுவான் என்பது பற்றியும், அவனுக்கு முடிவில் என்ன சம்பவிக்கும் என்பது பற்றியும் பவுல் தெளிவுபடுத்துகிறார். இயேசுகிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு முன்பு, விசுவாசிகள் மத்தியில் விசுவாச துரோகம் முந்தி நேரிடும். அப்போது கேட்டின் மகனாகிய பாவமனுஷன் வெளிப்படுவான். அவன் வெளிப்பட்ட பின்புதான் கிறிஸ்துவின் வருகையின் நாள் இருக்கும்.

இந்தப் பாவமனுஷன் "கேட்டின் மகன்" என்று அழைக்கப்படுகிறான். இவன் அழிவின் மகன். ஒரு சில காரியங்களை அழிப்பதற்கு இந்தக் கேட்டின் மகனாகிய பாவமனுஷன் தன்னை ஒப்புக்கொடுத்திருக்கிறான். ஏராளமான விசுவாசிகளின் ஆத்துமாக்களை அழித்துப்போடுவதற்கு இவனே காரணமாகயிருக்கிறான். விசுவாசிகள் மாத்திரமல்ல, ஏராளமான அவிசுவாசிகள் இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்தை கேட்கக்கூடாதவாறு தடை செய்து, அவருடைய ஆத்துமாக்களையும் அழித்துப்போடுகிறான்.

கேட்டின் மகன் கர்த்தருக்கும், அவருடைய உபதேசத்திற்கும், அவருடைய ராஜ்யத்திற்கும், அவருடைய பிள்ளைகளுக்கும் எதிர்த்து நிற்கிறவன். தேவனிடத்தில் காணப்படுகிற சர்வவல்லமையுள்ள தெய்வீக அதிகாரம் தன்னிடத்திலுமுள்ளது என்று சொல்லி கேட்டின் மகன் தன்னை உயர்த்திப் பெருமைப்படுகிறான். தேவன் என்னப்படுவது எதுவோ, ஆராதிக்கப்படுவது எதுவோ, அவையெல்லாவற்றிற்கும் மேலாக கேட்டின் மகன் தன்னை உயர்த்துகிறான். அவன் தேவனுடைய ஆலயத்தில் தேவன் போல உட்கார்ந்து, தன்னைத்தான் தேவனென்று காண்பிக்கிறவனாயும் இருப்பான் (2தெச 2:4). தன்னிடத்தில் கிறிஸ்துவின் அதிகாரம் இருப்பதாகச் சொல்லி அந்திகிறிஸ்து அநேகரை வஞ்சிக்கிறான்.

கேட்டின் மகனாகிய பாவமனுஷன் எப்போதுமே வெளிப்பட்டு, தன்னுடைய துர்கிரியை நடப்பிக்க ஆயத்தமாயிருக்கிறான். ஆனால் அவனால் இப்போது வெளிப்பட முடியாது. அவன் தன் காலத்திலேதான் வெளிப்பட முடியும். அவனுக்கு நியமிக்கப்பட்ட காலத்தில் மாத்திரமே அவனால் வெளிப்பட முடியும். அந்தக்காலத்திற்கு முன்பு வெளிப்பட கேட்டின் மகனுக்கு தடை உண்டாயிருக்கிறது (2தெச 2:6). அப்போஸ்தலர் பவுல் இதைச் சொல்லும்போது, இதை "அக்கிரமத்தின் இரகசியம்" என்று சொல்லுகிறார் (2தெச 2:6).

இந்த அக்கிரமம் இப்பொழுதே கிரியை செய்கிறது. கேட்டின் மகன் தன் கிரியையை ஆரம்பித்து, அதைத் தொடர்ந்து செய்து, இயேசுகிறிஸ்துவின் வருகையின் நாளுக்கு முன்பாக, அவன் தன் கிரியையின் உச்ச நிலையிலிருப்பான். அப்போஸ்தலர்கள் இப்பிரபஞ்சத்தில் ஜனங்கள் மத்தியிலே சுவிசேஷத்தைப் பிரசங்கம்பண்ணியபோது, கேட்டின் மகனாகிய பாவமனுஷன் வந்து, ஜனங்களின் இருதயங்களில் களைகளை விதைத்தான்.

அக்கிரமக்காரன் தனக்கு நியமிக்கப்பட்ட காலத்தில் வெளிப்படுவான். ஆனாலும் அவனை கர்த்தர் தம்முடைய வாயின் சுவாசத்தினாலே அழிப்பார். தம்முடைய வருகையின் பிரசன்னத்தினாலே நாசம்பண்ணுவார் (2தெச 2:8). அந்திக்கிறிஸ்துவின் ராஜ்யத்திற்கு அக்கிரமக்காரன் தலைவனாயிருக்கிறான். அக்கிரமக்காரன் அவனுக்கு நியமிக்கப்பட்ட காலத்தில் வெளிப்பட்டாலும், கர்த்தருடைய பலத்த கரத்தினால், அவருடைய வாயின் சுவாசத்தினால் அவனுக்கு அழிவு நியமிக்கப்பட்டிருக்கிறது. கர்த்தருடைய பிள்ளைகளாகிய நமக்கு அக்கிரமக்காரனின் அழிவு ஒரு ஆறுதலான செய்தி. நம்முடைய கர்த்தர் அக்கிரமக்காரனை நிச்சயமாகவே அழிப்பார் என்று பவுல் தெசலோனிக்கேயருக்கு உறுதியாகச் சொல்லுகிறார்.

அந்திக்கிறிஸ்துவின் அக்கிரமம் ஏற்றகாலத்திலே முழுவதுமாக அழிக்கப்படும். அவன் மொத்தமாக நாசம் பண்ணப்படுவான். அக்கிரமக்காரனுக்கு இயேசுகிறிஸ்துவின் வருகையின் பிரகாசத்தினால் நாசமுண்டாகும்.

பாவமனுஷனுடைய ஆ ீகையைப் பற்றி அப்போஸ்தலர் பவுல் விரிவாகச் சொல்லுகிறார். இவன் பொய்யான அற்புதங்களைச் செய்வான். தனக்கு சகலவல்லமையும் இருப்பதாகச் சொல்லி ஒரு சில அடையாளங்களைச் செய்து ஜனங்களை வஞ்சிப்பான். ஆனால் இவையெல்லாம் தேவனுடைய செயலல்ல. இது சாத்தானின் செயல் (2தெச 2:9) அப்போஸ்தலர் பவுல் சாத்தானுடைய செயலைப்பற்றிச் சொல்லும்போது, இது கெட்டுப்போகிறவர்களுக்குள்ளே அநீதியினால் உண்டாகும் சகலவித வஞ்சத்தோடு நடைபெறுகிற செயல் என்று விவரிக்கிறார் (2தெச 2:10).

ஏராளமானோர் அக்கிரமக்காரனுடைய அடையாளங்களையும், பொய்யான அற்புதங்களையும் நம்பி அவனுக்குத் தங்களை ஒப்புக்கொடுப்பார்கள். அவன் அநேகரை மோசம்போக்குவான். இவர்களெல்லாம் கெட்டுப்போகிறவர்கள். பாவமனுஷன் அவர்களை வஞ்சிக்கிறான். கெட்டுப்போகிறவர்கள் இரட்சிக்கப்படத் தக்கதாய் சத்தியத்தின்மேலுள்ள அன்பை அங்கீகரிப்பதில்லை. இதனால் இவர்களுக்குள்ளே சாத்தான் கிரியை செய்கிறான். சாத்தானுடைய கிரியை, அநீதியினால் உண்டாகும் சகலவித வஞ்சகத்தோடும், கெட்டுப் போகிறவர்களுக்குள்ளே நிறைவேறுகிறது.

நாம் சத்தியத்தை விசுவாசித்தால் நீதியில் பிரியப்படுவோம். சத்தியம் நம்மை பாதுகாக்கும். ஆனால் கெட்டுப்போகிறவர்களோ சத்தியத்தை விசுவாசிப்பதில்லை. அவர்கள் அநீதியில் பிரியப்படுகிறார்கள். ஆகையினால் அவர்களெல்லோரும் ஆக்கினைக்கு உள்ளாக்கப்படுகிறார்கள். அவர்கள் சத்தியத்தை விசுவாசியாமல் பொய்யை விசுவாசிக்கிறார்கள். இவர்கள் பொய்யிலும் அநீதியிலும் பிரியப்படுவதினால், கேட்டின் மகனாகிய பாவமனுஷன் இவர்களை எளிதாக வஞ்சித்துவிடுகிறான்.

அவிசுவாசிகளின் அழிவுக்கு அவர்களே காரணமாகயிருக்கிறார்கள். அவர்கள் சத்தியத்தை விசுவாசியாமல் போனதினாலும், பொய்யை விசுவாசித்ததினாலும் அவர்களுக்கு அழிவு உண்டாயிற்று. அவர்கள் நீதியில் பிரியப்படாமல் அநீதியில் பிரியப்பட்டபடியினால் அவர்களுக்கு நாசமுண்டாயிற்று. இவர்களுடைய மனதும் அசுத்தமாயிருக்கிறது. இவர்களுடைய ஜீவியமும் பாவத்தினால் கறைபடிந்திருக்கிறது. அசுத்தமான மனதும் பாவமான சரீரமும் இணைந்து கிரியை நடப்பித்து, சாத்தானால் வஞ்சிக்கப்படுகிறது.

கர்த்தர் கெட்டுப்போகிறவர்களை தண்டிக்கிறார். அவர்கள் சத்தியத்தை விசுவாசியாமற் போனதினிமித்தமாகவும், அவர்கள் அநீதியில் பிரியப்படுவதினிமித்தமாகவும், அவர்கள் பொய்யை விசுவாசிப்பதினிமித்தமாகவும், தேவன் அவர்களை ஆக்கினைக்குட்படுத்துகிறார். அவர்களைத் தண்டிக்கிறார். தம்முடைய கிருபையை அவர்களை விட்டு நீக்கிப்போடுகிறார். பாவிகளிடமிருந்து தேவனுடைய கிருபை நீக்கப்படும்போது, அவர்கள் இரட்சிக்கப்படுவதற்கு வாய்ப்பில்லாமல் போகிறது. ஆத்தும இரட்சிப்பு இல்லையென்றால் அவர்கள் தேவனுடைய ஆக்கினைக்குட்படுத்தப்படுவது நிச்சயம்.

தேவன் அவர்களை அவர்களுடைய இருதயத்தின் துர்இச்சைகளுக்கு ஒப்புக்கொடுத்திருக்கிறார். தம்முடைய கிருபையை அவர்களுக்குக் காண்பியாமல் அவர்களுடைய விருப்பத்திற்கும் சித்தத்திற்கும் அவர்களை ஒப்புக்கொடுத்துவிடுகிறார். தேவன் அவர்களுக்குள்ளே கொடிய வஞ்சகத்தை அனுப்புகிறார். தேவகிருபையில்லாத இடத்தில் பாவம் பூரணமாய் ஆளுகை செய்கிறது. அவர்களை வஞ்சிக்கிறது. அக்கிரமக்காரன் அவர்களை வஞ்சித்து தன்னுடைய ஆளுகைக்குட்படுத்துகிறான்.

நிலைகொண்டிருங்கள்
2தெச 2 : 13-15

2தெச 2:13. கர்த்தருக்குப் பிரியமான சகோதரரே, நீங்கள் ஆவியினாலே பரிசுத்தமாக்கப் படுகிறதினாலும், சத்தியத்தை விசுவாசிக்கிறதினாலும் இரட்சிப்படையும்படிக்கு, ஆதிமுதல் தேவன் உங்களைத் தெரிந்துகொண்டபடியினாலே, நாங்கள் உங்களைக்குறித்து எப்பொழுதும் தேவனை ஸ்தோத்திரிக்கக் கடனாளிகளாயிருக்கிறோம்.

2தெச 2:14. நீங்கள் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மகிமையை அடையும்பொருட்டாக எங்கள் சுவிசேஷத்தினாலே அந்த இரட்சிப்புக்கு அவர் உங்களை அழைத்தார்.

2தெச 2:15. ஆகையால், சகோதரரே, நீங்கள் நிலைகொண்டு, வார்த்தையினாலாவது நிருபத்தினாலாவது நாங்கள் உங்களுக்கு உபதேசித்த முறைமைகளைக் கைக்கொள்ளுங்கள்.

அப்போஸ்தலர் பவுல் தெசலோனிக்கேயருக்கு எச்சரிப்பின் வார்த்தைகளைச் சொன்னாலும், அவர்களுக்கு ஆறுதலான வார்த்தையும் சொல்லி அவர்களை உற்சாகப்படுத்துகிறார். தெசலோனிக்கேயர் நிமித்தமாய் பவுல் கர்த்தரைத் துதிக்கிறார். அவர்களைக்குறித்து எப்பொழுதும் தேவனை ஸ்தோத்திரிக்க தான் கடனாளியாயிருப்பதாகவும் எழுதுகிறார். தெசலோனிக்கேயர் கர்த்தருக்குப் பிரியமான சகோதரராயிருக்கிறார்கள். இதற்காகவே பவுல் அவர்களைக் குறித்து எப்பொழுதும் தேவனை ஸ்தோத்திரிக்கிறார்.

தேவன் தாமே தெசலோனிக்கேயரை தம்முடைய கிருபையினால் தெரிந்துகொண்டார். ஆதிமுதல் தேவனே அவர்களைத் தெரிந்துகொண்டவர். தம்முடைய நித்திய அன்பினால் தேவன் அவர்கள்மீது அன்புகூருகிறார். தெசலோனிக்கேயர் இரட்சிப்படைய வேண்டும் என்பது தேவனுடைய சித்தம். அதற்காகவே தேவன் அவர்களைத் தெரிந்துகொண்டார். அவர்கள் இரட்சிப்படைவதற்கான உபாயத்தையும் பவுல் இங்கு விவரிக்கிறார். அவர்கள் ஆவியினாலே பரிசுத்தமாக்கப்படவேண்டும். சத்தியத்தை விசுவாசிக்கவேண்டும். அப்போது அவர்களுக்கு இரட்சிப்பு உண்டாகும்.

நாம் பரிசுத்தமாயிருப்பதினால் தேவன் நம்மைத் தெரிந்துகொள்ளவில்லை. நாம் ஆவியினாலே பரிசுத்தமாக்கப்பட முடியும் என்று தீர்மானித்தே தேவன் நம்மைத் தெரிந்துகொண்டார். நாம் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள். தேவனுடைய தெரிந்தெடுப்புக்கு நாம் பாத்திரவான்களாய் நடந்துகொள்ளவேண்டும். பரிசுத்தத்திற்கு தெரிந்துகொள்ளப்பட்ட நாம் அசுத்தமாய் ஜீவிக்கக்கூடாது. விசுவாசமும் பரிசுத்தமும் நம்முடைய ஜீவியத்தில் இணைந்து காணப்படவேண்டும். அதுபோலவே பரிசுத்தமும் சந்தோஷமும் நம்முடைய ஜீவியத்தில் நிரம்பியிருக்கவேண்டும்.

நாம் இரட்சிக்கப்படும்போது, நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மகிமையைப் பெற்றுக்கொள்கிறோம். அந்த மகிமையை அடையும் பொருட்டாகவே, சுவிசேஷத்தினாலே நாம் இரட்சிக்கப்படும்படியாக, தேவன் நம்மை அழைத்திருக்கிறார். சுவிசேஷத்தின் மூலமாய் தேவன் நம்மை அழைக்கிறார். நாம் கிறிஸ்துவின் மகிமையையும், சந்தோஷத்தையும் பெற்றுக்கொள்ளுமாறு நமக்கு அழைப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. இயேசுகிறிஸ்துவின் மகிமையில் பங்குபெறுகிற நாம், அவரோடுகூட மகிமையடைவோம். கிறிஸ்துவோடுகூட நித்தியகாலமாய் ஜீவிப்போம். நாம் அவருடைய மகிமையைக் காண்போம். அவரோடுகூட நாமும் மகிமையடைந்து அவருடைய மகிமையில் பங்குபெறுவோம் (2தெச 2:14).

கர்த்தராகிய இயேசுகிறிஸ்து தெசலோனிக்கேயரை இரட்சிப்படையும் படிக்கு தெரிந்துகொண்டதினால், அவர்கள் எப்படி வேண்டுமானாலும் ஜீவிக்கலாம் என்னும் அனுமதி அவர்களுக்குக் கொடுக்கப்படவில்லை. அவர்கள் பரிசுத்தமில்லாமல், கவனக் குறைவாக, நித்திரையடைந்தவர்களைப் போல பாவத்தில் ஜீவிக்கலாமென்று பவுல் அவர்களுக்கு ஆலோசனை சொல்லவில்லை. தேவன் அவர்களை அழைத்திருக்கிறார். ஆகையினால் அவர்கள் தங்கள் ஆவிக்குரிய ஜீவியத்திலும், விசுவாசத்திலும் நிலைகொண்டிருக்கவேண்டும். பவுல் அவர்களுக்கு வார்த்தையினாலும், நிருபத்தினாலும் உபதேசித்த முறைமைகளை அவர்கள் கைக்கொள்ள வேண்டும் (2தெச 2:15). தெசலோனிக்கேயர் தங்கள் ஆவிக்குரிய ஜீவியத்தில் கவனமாய் நிலைகொண்டிருக்கவேண்டும்.

ஸ்திரப்படுத்துவாராக 2தெச 2 : 16,17

2தெச 2:16. நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவும், நம்மிடத்தில் அன்புகூர்ந்து நித்திய ஆறுதலையும் நல்நம்பிக்கையையும் கிருபையாய் நமக்குக் கொடுத்திருக்கிற நம்முடைய பிதாவாகிய தேவனும்,

2தெச 2:17. உங்கள் இருதயங்களைத் தேற்றி, எல்லா நல்வசனத்திலும் நற்கிரியையிலும் உங்களை ஸ்திரப்படுத்துவாராக.

அப்போஸ்தலர் பவுல் தெசலோனிக்கேயருக்காக ஜெபம் பண்ணுகிறார். நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினிடத்திலும், நம்முடைய பிதாவாகிய தேவனிடத்திலும் அவர்களுக்காக ஜெபம்பண்ணுகிறார். நாமும் ஜெபம்பண்ணும்போது, நம்முடைய பிதாவாகிய தேவனிடத்தில் மாத்திரம் ஜெபம்பண்ணினால் போதாது. நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினிடத்திலும் ஜெபம்பண்ணவேண்டும்.

நாம் கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணும்போது, அவர் நமக்கு இதுவரையிலும் செய்த நன்மைகளை நாம் நினைவுகூரவேண்டும். நாம் அனுபவிக்கிற எல்லா நன்மைகளுக்கும், நமக்கு வாக்குத்தத்தம்பண்ணப்பட்டிருக்கிற எல்லா நன்மைகளுக்கும் இயேசுகிறிஸ்துவின் அன்பே ஆதாரமாயிருக்கிறது. இயேசுகிறிஸ்து என்னும் நீரூற்றிலிருந்தே, நாம் நித்திய ஆறுதலையும், நம்பிக்கையையும் பெற்றுக்கொள்கிறோம். கர்த்தருடைய பரிசுத்தவான்களாகிய நமக்குக் கொடுக்கப்படுகிற ஆறுதல் நித்திய ஆறுதல். கர்த்தர் நமக்குக் கொடுக்கிற ஆறுதல் ஒருபோதும் குறைந்துபோவதில்லை. அவை ஒருபோதும் அழிந்துபோவதில்லை. நித்திய ஜீவன்மீது நாம் வைத்திருக்கிற நம்பிக்கையே நம்முடைய நித்திய ஆறுதலுக்கு அஸ்திபாரமாயிருக்கிறது. நாம் தேவனுடைய கிருபையையும், இரக்கத்தையும் எதிர்பார்க்கிறோம். நம்முடைய நம்பிக்கை தேவனுடைய கிருபையிலும் இரக்கத்திலும் அஸ்திபாரம் போடப்பட்டிருக்கிறது (2தெச 2:16)

அப்போஸ்தலர் பவுல் தெசலோனிக்கேயருக்காக ஜெபிக்கிறார். கர்த்தரிடத்தில் விண்ணப்பம்பண்ணுகிறார். அவர்களுக்கு நித்திய ஆறுதலும், நல்நம்பிக்கையும், தேவனுடைய கிருபையினால் பெருகியிருக்க வேண்டுமென்று ஜெபிக்கிறார். அவர்களுடைய இருதயங்கள் தேற்றப்படவேண்டுமென்றும், அவர்கள் எல்லா நல்வசனத்திலும், நற்கிரியையிலும் ஸ்திரப்பட்டிருக்கவேண்டுமென்றும் பவுல் அவர்களுக்காக ஜெபிக்கிறார்.

நாம் ஸ்திரப்படுவதற்கு ஆறுதல் தேவைப்படுகிறது. ஆறுதல் இல்லையென்றால் நம்முடைய இருதயம் அலைபாய்ந்துகொண்டிருக்கும். ஆறுதல் பெருகும்போதுதான் ஸ்திரமுண்டாகும். நம்முடைய சுயமுயற்சியினால் நம்மை நாமே ஸ்திரப்படுத்திக்கொள்ள முடியாது. கர்த்தர் தாமே நம்மை ஸ்திரப்படுத்தவேண்டும்.

தேவனுடைய வழிகளில் நாம் பிரியப்படவேண்டும். அவருடைய அடிச்சுவடுகளைச் சந்தோஷமாய்ப் பின்பற்றவேண்டும். அப்போதுதான் அவருடைய பாதையில் நடக்கவேண்டும் என்னும் ஆர்வம் நமக்குள் உண்டாகும். நம்முடைய கடமைகளை செய்யாமல் நிறுத்திவிட்டால், அல்லது கடமைகளை சரியாகச் செய்யவில்லையென்றால் நமக்கு ஆறுதல் உண்டாகாது. தேவனுடைய சந்தோஷத்திற்கும், ஆறுதலுக்கும் நாம் அந்நியராகயிருப்போம். ஆகையினால் கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் எல்லா நல்வசனத்திலும், நற்கிரியையிலும் ஸ்திரப்பட்டிருக்கவேண்டும். நம்முடைய நல்ல வார்த்தைகளினாலும், நம்முடைய நற்கிரியைகளினாலும் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமம் மகிமைப்படவேண்டும்.

3 அதிகாரம்

அப்போஸ்தலர் பவுல் தெசலோனிக்கேயருக்காக கருத்தாய் ஜெபித்தார். இப்போது அவர்கள் தனக்காக ஜெபிக்குமாறு பவுல் அவர்களிடத்தில் வேண்டிக்கொள்கிறார் (2தெச 3:1-5). தெசலோனிக்கேயர் மத்தியில் ஒரு சில சகோதரர் ஒழுங்கற்று நடக்கிறார்கள். தெசலோனிக்கேயர் அவர்களைவிட்டு விலகவேண்டுமென்று அவர்களுக்குக் கட்டளையிடுகிறார் (2தெச 3:6-15). ஆசீர்வாதத்தோடும் ஜெபத்தோடும் இந்த நிருபத்தை நிறைவுசெய்கிறார் (2தெச 3:16-18).

எங்களுக்காக வேண்டிக் கொள்ளுங்கள் 2தெச 3 : 1-5

2தெச 3:1. கடைசியாக, சகோதரரே, உங்களிடத்தில் கர்த்தருடைய வசனம் பரம்பி மகிமைப்படுகிறபோது, எவ்விடத்திலும் பரம்பி மகிமைப்படும்படிக்கும்.

2தெச 3:2. துர்க்குணராகிய பொல்லாத மனுஷர் கையினின்று நாங்கள் விடுவிக்கப்படும்படிக்கும், எங்களுக்காக வேண்டிக்கொள்ளுங்கள்; விசுவாசம் எல்லாரிடத்திலுமில்லையே.

2தெச 3:3. கர்த்தரோ உண்மையுள்ளவர், அவர் உங்களை ஸ்திரப்படுத்தி, தீமையினின்று விலக்கிக் காத்துக்கொள்ளுவார்.

2தெச 3:4. மேலும், நாங்கள் கட்டளையிடுகிறவைகளை நீங்கள் செய்து வருகிறீர்களென்றும், இனிமேலும் செய்வீர்களென்றும், உங்களைக்குறித்துக் கர்த்தருக்குள் நம்பிக்கையாயிருக்கிறோம்.

2தெச 3:5. கர்த்தர் உங்கள் இருதயங்களை தேவனைப்பற்றும் அன்புக்கும் கிறிஸ்துவின் பொறுமைக்கும் நேராய் நடத்துவாராக.

தன்னுடைய சிநேகிதர்கள் தனக்காக ஜெபிக்கவேண்டுமென்று அப்போஸ்தலர் பவுல் விரும்புகிறார். பவுல் தன்னுடைய ஜெபங்களில் அவர்களுக்காக எப்போதும் நினைவுகூருகிறார். அதுபோலவே அவர்கள் தனக்காகவும், தன்னுடைய உடன்ஊழியருக்காகவும் ஜெபிக்கவேண்டுமென்று, பவுல் அவர்களுடைய ஜெபத்தையும் நாடுகிறார். பரிசுத்தவான்கள் ஒருவருக்கொருவர் ஜெபிப்பதின் மூலமாய் அவர்களுக்கு மத்தியில் ஐக்கியமுண்டாகும். ஜெபத்தின் மூலமாகவே விசுவாசிகள் மத்தியில் ஐக்கியம் வலுப்படும். ஐக்கியம் தொடரும்.

விசுவாசிகள் ஒன்றுகூடியிருக்கும் போது ஒருவருக்கொருவர் ஜெபிப்பது வழக்கம். ஆனாலும் இவ்வாறு ஒருவருக்கொருவர் ஜெபித்தால் மாத்திரம் போதாது. தங்கள் மத்தியில் இல்லாத விசுவாசிகளுக்காகவும் அவர்கள் ஒன்றுகூடி ஜெபிக்கவேண்டும். நாம் நமக்காகவும் ஜெபிக்கவேண்டும். பிறருக்காகவும் ஜெபிக்கவேண்டும்.

அப்போஸ்தலர் பவுல் தெசலோனிக்கேயரிடம் ஒரு சில ஜெபக்குறிப்புக்களைச் சொல்லுகிறார். முதலாவதாக சுவிசேஷ ஊழியம் ஆசீர்வாதமாய் நடைபெறவேண்டும். கர்த்தருடைய வசனம் தெசலோனிக்கேயரிடத்தில் பரம்பி மகிமைப்படுகிறது. அதுபோல தேவவசனம் எவ்விடத்திலும் பரம்பி மகிமைப்பட வேண்டும். இதுவே அப்போஸ்தலரின் விருப்பம். மூலபாஷையில் "பரம்புதல்" என்னும் வார்த்தைக்கு "ஓடுதல்" என்னும் பொருளுள்ள கிரேக்க வார்த்தை பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

கர்த்தருடைய வசனம் எல்லா மக்கள் மத்தியிலும் தடையில்லாமல் வேகமாய் ஓடவேண்டும். விசுவாசிகளுடைய இருதயத்தில் தேவவசனம் வேரூன்றி முளைக்கவேண்டும். அது எல்லா இடங்களுக்கும் பரவவேண்டும். சுவிசேஷ வசனத்தைக் கேட்கிறவர்கள் தங்கள் இருதயங்களில் அசைக்கப்படவேண்டும். கர்த்தருடைய வசனம் மனுஷருடைய மனச்சாட்சியோடு பேசவேண்டும். பாவிகள் சுவிசேஷ வசனத்தைக் கேட்டு மனந்திரும்பும்போது, கர்த்தருடைய நாமம் மகிமைப்படும். தேவன் தம்முடைய வசனத்தை மகிமைப்படுத்துவார். சுவிசேஷத்தின் மூலமாய் அவர் தம்முடைய நாமத்தை மகிமைப்படுத்துவார்.

சுவிசேஷ ஊழியக்காரர்களுக்கு பாதுகாப்பு தேவை. துர்குணராகிய பொல்லாத மனுஷர் கர்த்தருடைய ஊழியக்காரர்களுக்கு விரோதமாக பொல்லாத கிரியை செய்கிறார்கள். அவர்களுடைய கையினின்று தாங்கள் விடுவிக்கும்படிக்கு ஜெபிக்குமாறு பவுல் தெசலோனிக்கேயரை கேட்டுக்கொள்கிறார். ஊழியக்காரர்கள் ஆரோக்கியமாகவும், தெம்பாகவும் இருந்தால்தான் வேகமாய் ஊழியம் செய்ய முடியும். அவர்கள் உயிரோடிருந்தால்தான் பிரசங்கம்பண்ண முடியும். துர்க்குணராகிய பொல்லாத மனுஷர் மூலமாய் கர்த்தருடைய ஊழியக்காரருக்கு ஒரு தீங்கும் வரக்கூடாது என்று விசுவாசிகள் ஜெபம்பண்ணவேண்டும்.

இப்பிரபஞ்சத்தில் விசுவாச துரோகம் அதிகமாய் காணப்படுகிறது. அவபக்தியுள்ள துன்மார்க்கர் ஏராளமாயிருக்கிறார்கள். துர்க்குணராகிய பொல்லாத மனுஷர் கர்த்தருக்கு விரோதமாகவும், அவருடைய சுவிசேஷத்திற்கு விரோதமாகவும், அவருடைய ஊழியக்காரருக்கு விரோதமாகவும் பொல்லாப்பு செய்து கொண்டேயிருக்கிறார்கள். அவர்களுடைய பொல்லாப்பினால் கர்த்தருடைய உண்மையான ஊழியக்காரர்கள் அதிகமாய்ப் பாதிக்கப்படுகிறார்கள்.

இப்பிரபஞ்சத்து ஜனங்களில் அநேகர் கிறிஸ்துவின் சுவிசேஷத்தை விசுவாசிப்பதில்லை. அவர்கள் சுவிசேஷத்தை விசுவாசியாமற்போனாலும், அமைதியாகவும் இருப்பதில்லை. இப்பேற்பட்டவர்கள் சுவிசேஷத்திற்கு துணிகரமாய் எதிர்த்து நிற்கிறார்கள். சுவிசேஷத்தைப் பிரசங்கம்பண்ணுகிற ஊழியக்காரர்கள் துன்பப்படுத்துகிறார்கள். ஊழியத்திற்கு உபகாரம் செய்யாவிட்டாலும், தங்களால் முடிந்த எல்லா உபத்திரவங்களையும் செய்கிறார்கள்.

இப்படிப்பட்டவர்களை நம்மால் நம்பமுடியாது. இவர்கள் மூலமாய் நமக்கு பாதுகாப்பும் கிடைக்காது. இப்படிப்பட்டவர்கள் கையில் நம்மை பத்திரமாய் ஒப்புக்கொடுக்கவும் முடியாது. ஆகையினால் துர்க்குணராகிய பொல்லாத மனுஷர் கைகளிலிருந்து ஊழியக்காரர்கள் விடுவிக்கப்படும்படிக்கு விசுவாசிகளெல்லோரும் ஜெபம்பண்ண வேண்டும். துன்மார்க்கருடைய மனச்சாட்சியும் மழுங்கிப்போயிருக்கிறது. அவர்கள் தேவனையும் மதிப்பதில்லை. மனுஷரையும் மதிப்பதில்லை.

தெசலோனிக்கேயர் கர்த்தரை நம்பவேண்டுமென்றும், அவரையே சார்ந்திருக்கவேண்டுமென்றும் பவுல் அவர்களை உற்சாகப்படுத்துகிறார். கர்த்தர் உண்மையுள்ளவர். கிருபை மிகுந்தவர். அவர் தம்முடைய கிருபையினால் நம்மை ஸ்திரப்படுத்துவார். எல்லா தீமையினின்றும் நம்மை விலக்கிக் காத்துக்கொள்வார். தேவன் நம்மை ஸ்திரப்படுத்தும் வரையில் மாத்திரமே நம்மால் ஸ்திரமாய் நிற்கமுடியும். கர்த்தர் நம்மை கைவிட்டுவிட்டால் நம்மால் நிலைத்து நிற்கமுடியாது.

நம்முடைய கர்த்தரே நமக்குள் நற்கிரியையை ஆரம்பித்து வைத்திருக்கிறவர். அவரே நம்மை முற்றும் முடிய பாதுகாத்து வழிநடத்துகிறவர். நம்மை ஸ்திரப்படுத்துவதற்கும், கரம்பிடித்து வழிநடத்துவதற்கும் கர்த்தர் உண்மையுள்ளவராயிருக்கிறார்(2தெச 3:3).

நாம் தேவனுடைய கிருபையில் சார்ந்திருக்கவேண்டும். தம்முடைய வாக்குத்தத்தங்களை நிறைவேற்றுவதற்கு தேவன் உண்மையுள்ளவர். கர்த்தர் ஒரு வாக்குத்தத்தம் பண்ணும்போது, அந்த வாக்குத்தத்தம் சத்தியமாயிருக்கிறது. தம்முடைய வாக்குத்தத்தை அவர் நிச்சயமாகவே நிறைவேற்றுவார். அவர் நமக்கு உண்மையுள்ள தேவன். நம்முடைய உண்மையான சிநேகிதர்.

கர்த்தர் நமக்கு உண்மையுள்ளவராயிருப்பதுபோல, நாமும் அவருக்கு உண்மையுள்ளவராயிருக்க வேண்டும். நம்முடைய விசுவாசத்திலும், அன்பிலும், கிரியையிலும் நாம் கர்த்தருடைய சமுகத்திற்கு முன்பாக உண்மையுள்ளவர்களாய் காணப்பட வேண்டும். கர்த்தரிடத்தில் நாம் செய்த பொருத்தனைகளில் உண்மையுள்ளவர்களாயிருக்க வேண்டும். கர்த்தரோடு நாம் வைத்திருக்கிற ஐக்கியத்தில் உண்மையிருக்கவேண்டும். நம்மிடத்தில் மாய்மாலம் சிறிதும் காணப்படக்கூடாது.

அப்போஸ்தலர் பவுல் தேவன்மீது நம்பிக்கை வைத்திருக்கிறார். அவர் தெசலோனிகேயர்மீதும் நம்பிக்கை வைத்திருக்கிறார். தேவன் தம்முடைய வாக்குத்தத்தங்களை நிறைவேற்றுவார் என்று பவுல் கர்த்தரை நம்புகிறார். அதுபோலவே தெசலோனிக்கேயரும் அப்போஸ்தலர்கள் கட்டளையிடுவதை செய்து வருவார்கள் என்று அவர்களையும் நம்புகிறார். பவுல் தெசலோனிக்கேயரை நம்புவதற்கு, அவர் கர்த்தரில் நம்பிக்கையாயிருப்பதுதான் காரணம். ஏனெனில் பவுல் அவர்களைக் குறித்து கர்த்தருக்குள் நம்பிக்கையாயிருக்கிறார் (2தெச 3:4).

அப்போஸ்தலர் பவுல் தெசலோனிக்கேயருக்காக சுருக்கமாய் ஜெபிக்கிறார். தேவன் தாமே அவர்களுடைய இருதயங்களை தேவனைப்பற்றும் அன்பிற்கும், கிறிஸ்துவின் பொறுமைக்கும் நேராய் நடத்தவேண்டுமென்பதே பவுலின் ஜெபம். நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் நாம் சந்தோஷமாயிருக்க வேண்டுமென்றால் நம்முடைய இருதயத்தில் தேவனைப்பற்றும் அன்பும், கிறிஸ்துவின் பொறுமையும் நிரம்பியிருக்கவேண்டும். இவற்றை நம்முடைய சுயமுயற்சியினால் பெற்றுக்கொள்ள முடியாது. தேவன் தாமே நம்மை வழிநடத்துகிறவர். கர்த்தர் தாமே நம்முடைய இருதயங்களை தேவனைப்பற்றும் அன்புக்கும் கிறிஸ்துவின் பொறுமைக்கும் நேராய் வழிநடத்தவேண்டும்.

கர்த்தர் நம்மை வழிநடத்தவில்லையென்றால், நம்முடைய நடை தடுமாறும். நமக்கு இஷ்டமான வழியில் நாம் நடந்துகொண்டிருப்போம். இப்பிரபஞ்சத்தின்மீது ஆசை வைத்து சாத்தானுடைய வழிகளில் நடக்க ஆரம்பித்துவிடுவோம். ஆகையினால் கர்த்தர் தாமே தம்முடைய சித்தத்தின் பிரகாரமாக நம்மை வழிநடத்தவேண்டுமென்று கர்த்தருடைய சமுகத்தில் நம்மை ஒப்புக்கொடுக்க வேண்டும்.

கிறிஸ்துவானவர் நமக்குள் கிரியை நடப்பிப்பதற்கு நாம் பொறுமையோடு காத்திருக்கவேண்டும். நாம் கிறிஸ்துவில் நம்பிக்கையாயிருக்கிறோம். கிறிஸ்துவானவர் இந்தப் பூமியிலே ஒரு தரம் மாம்சத்திலே வெளிப்பட்டார். அவர் மறுபடியும் தம்முடைய மகிமையிலே இந்தப் பூமிக்கு வருவார். அவர் வரும் வரையிலும் நாம் பொறுமையோடு காத்திருக்கவேண்டும். கிறிஸ்து பொறுமையுள்ளவர். அவரே நமக்கு முன்மாதிரியாகயிருக்கிறவர்.

கிறிஸ்துவினிடத்தில் காணப்பட்ட அதே பொறுமை நம்மிடத்திலும் காணப்பட வேண்டும். கிறிஸ்துவினிமித்தமாய் நாம் பொறுமையோடிருக்கவேண்டும். அவருடைய வருகையை பொறுமையோடு எதிர்பார்த்து, தேவனைப்பற்றும் அன்புக்கு நேராகவும், கிறிஸ்துவின் பொறுமைக்கும் நேராகவும் நடக்கவேண்டும்.

ஒழுங்கற்று நடக்கிற சகோதரன் 2தெச 3 : 6-15

2தெச 3:6. மேலும், சகோதரரே, எங்களிடத்தில் ஏற்றுக்கொண்ட முறைமையின்படி நடவாமல், ஒழுங்கற்று நடக்கிற எந்தச் சகோதரனையும் நீங்கள் விட்டு விலக வேண்டுமென்று, நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே ,உங்களுக்குக் கட்டளையிடுகிறோம்.

2தெச 3:7. இன்னவிதமாய் எங்களைப் பின்பற்ற வேண்டுமென்று நீங்கள் அறிந்திருக்கிறீர்களே; நாங்கள் உங்களுக்குள்ளே ஒழுங்கற்று நடவாமலும்,

2தெச 3:8. ஒருவனிடத்திலும் இலவசமாய்ச் சாப்பிடாமலும், உங்களில் ஒருவனுக்கும் பாரமாயிராதபடிக்கு இரவும் பகலும் பிரயாசத்தோடும் வருத்தத்தோடும் வேலைசெய்து சாப்பிட்டோம்.

2தெச 3:9. உங்கள்மேல் பாரத்தை வைப்பதற்கான அதிகாரம் எங்களுக்கு இல்லையென்பதினாலே அப்படிச் செய்யாமல், நீங்கள் எங்களைப் பின்பற்றும்படிக்கு நாங்கள் உங்களுக்கு மாதிரியாயிருக்கவேண்டுமென்றே அப்படிச் செய்தோம்.

2தெச 3:10. ஒருவன் வேலைசெய்ய மனதில்லாதிருந்தால் அவன் சாப்பிடவும் கூடாதென்று நாங்கள் உங்களிடத்தில் இருந்தபோது உங்களுக்குக் கட்டளையிட்டோமே.

2தெச 3:11. உங்களில் சிலர் யாதொரு வேலையும் செய்யாமல், வீண் அலுவற்காரராய், ஒழுங்கற்றுத் திரிகிறார்களென்று கேள்விப்படுகிறோம்.

2தெச 3:12. இப்படிப்பட்டவர்கள் அமைதலோடே வேலைசெய்து, தங்கள் சொந்தச் சாப்பாட்டைச் சாப்பிடவேண்டுமென்று, நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலே அவர்களுக்குக் கட்டளையிட்டுப் புத்திசொல்லுகிறோம்.

2தெச 3:13. சகோதரரே, நீங்கள் நன்மை செய்வதிலே சோர்ந்து போகாமலிருங்கள்.

2தெச 3:14. மேலும், இந்த நிருபத்தில் சொல்லிய எங்கள் வசனத்துக்கு ஒருவன் கீழ்ப்படியாமற்போனால், அவனைக் குறித்துக்கொண்டு, அவன் வெட்கப்படும்படிக்கு அவனுடனே கலவாதிருங்கள்.

2தெச 3:15. ஆனாலும் அவனைச் சத்துருவாக எண்ணாமல், சகோதரனாக எண்ணி, அவனுக்குப் புத்தி சொல்லுங்கள்.

தெசலோனிக்கேயர் மத்தியில் ஒரு சில சகோதரர் ஒழுங்கற்று நடக்கிறார்கள். அவர்களுடைய இருதயங்களில் தேவனைப்பற்றும் அன்பு இல்லை. அவர்கள் கிறிஸ்துவின் பொறுமைக்கு நேராய் நடக்கவில்லை. இவர்கள் தங்கள் ஜீவியத்தில் ஏராளமான பாவங்களைச் செய்கிறார்கள்.

இவர்கள் தெசலோனிக்கேயர் மத்தியிலேதான் இருக்கிறார்கள். ஆனாலும் இப்படிப்பட்ட சிலர் ஒழுங்கற்று நடக்கிறார்கள். விசுவாசிகளுடைய ஐக்கியத்தில்கூட இப்படி ஒரு சிலர் இருப்பார்கள். கர்த்தருக்குப் பயந்து ஜீவிக்காமல் ஒழுங்கற்று ஜீவிப்பார்கள். இவர்களிடத்தில் தேவனைப்பற்றிய பயபக்தியிருக்காது.

நாம் இப்பிரபஞ்சத்தில் இருக்கும் வரையிலும் எந்த மனுஷனாலும் பரிசுத்தத்தில் பரிபூரணமாய் ஜீவிக்க முடியாது. ஆனாலும் நம்முடைய ஜீவியத்தில் பரிசுத்தமும் பயபக்தியும் காணப்படவேண்டும். மனுஷர் அநேக தப்பிதங்களைச் செய்வதினால், அரசாங்கங்கள் ஏராளமான சட்டதிட்டங்களை உண்டுபண்ணுகிறார்கள். தப்பிதங்களை கூடினால் சட்டங்களும் கூடும்.

தெசலோனிக்கேயர் மத்தியிலிருக்கிற ஒரு சில சகோதரர் அப்போஸ்தலரிடத்தில் ஏற்றுக்கொண்ட முறைமையின்படி நடப்பதில்லை. அவர்கள் ஒழுங்கற்று நடக்கிறார்கள் (2தெச 3:6). அவர்கள் மத்தியிலே ஒரு சிலர் யாதொரு வேலையும் செய்யாமல், வீண் அலுவற்காரராய், ஒழுங்கற்று திரிகிறார்கள் (2தெச 3:11). இவர்கள் பெருந்தீனி உண்கிறவர்களோ அல்லது குடித்து வெறித்திருக்கிறவர்களோ அல்ல. இவர்கள் சும்மாயிருக்கிறவர்கள். ஒரு வேலையும் செய்யமாட்டார்கள். வீண் அலுவற்காரர்கள். இப்படிப்பட்டவர்களும் ஒழுங்கற்றுத்தான் திரிகிறார்கள்.

ஒருவர் யாருக்கும் எந்தத் தீங்கும் செய்யமாட்டார் என்று சொல்லுவது அவரைக் குறித்த நற்சாட்சி ஆகாது. நாமெல்லோருமே நன்மை செய்யவேண்டும். நன்மையான காரியங்களைப் பேசவேண்டும். நன்மையான காரியங்களைச் செய்யவேண்டும். நாம் உபகாரம் செய்யாவிட்டாலும் உபத்திரவம் பண்ணாதவர்களாகயிருந்தால் போதுமென்று நினைக்கக்கூடாது. நாம் உபகாரமும் செய்யவேண்டும். உபத்திரவமும் செய்யக்கூடாது. கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் நற்கிரியைகளைச் செய்யவேண்டும்.

தெசலோனிக்கேயரில் ஒழுங்கற்று நடக்கிற சகோதரர், கர்த்தருடைய வருகையைக் குறித்து தவறான உபதேசம் பெற்றிருக்கிறார்கள். இயேசுகிறிஸ்துவின் வருகை உடனே இருக்குமென்றும், நாம் யாதொரு வேலையும் செய்ய வேண்டியதில்லையென்றும், வேலை செய்வதினால் நமக்குப் பிரயோஜனமில்லையென்றும், கர்த்தர் உடனே வரப்போவதினால், நாமெல்லோரும் அவரோடுகூட எடுத்துக்கொள்ளப்படுவோம் என்று விசுவாசித்து, யாதொரு வேலையும் செய்யாமல் சும்மாயிருக்கிறார்கள் (2தெச 3:11).

கர்த்தருடைய பிள்ளைகள் ஒவ்வொருவரும் தங்களுக்கு கொடுக்கப்பட்டுள்ள வேலைகளை நேர்த்தியாய்ச் செய்து முடிக்கவேண்டும். நாமெல்லோரும் நம்முடைய அழைப்புக்கு பாத்திரவான்களாய் நடந்துகொள்ள வேண்டும். கர்த்தருடைய பிள்ளைகள் யாதொரு வேலையும் செய்யாமல் சும்மாயிருந்து, பொழுதை வீணாகப் போக்கக்கூடாது. நம்முடைய சமுதாயத்தில் நாம் நற்சாட்சியுள்ளவர்களாயிருக்க வேண்டும்.

தெசலோனிக்கேயர் மத்தியில் ஒரு சிலர் ஒரு வேலையும் செய்யாமல் வீண் அலுவற்காரராயிருக்கிறார்கள். இவர்கள் ஒரு வேலையும் செய்யமாட்டார்கள். ஆனால் வீணான பேச்சுக்களைப் பேசுவார்கள். பிறருடைய காரியங்களில் தேவையில்லாமல் தலையிடுவார்கள். தங்களுடைய வேலைகள் ஒன்றும் செய்யமாட்டார்கள். தங்களுடைய கடமைகள் எதையும் நிறைவேற்றாமல் சும்மாயிருப்பார்கள். ஆனால் மற்றவர்களுடைய வேலைகளில் தேவையில்லாமல் தலையிடுவார்கள்.

நாம் யாதொரு வேலையும் செய்யாமல் சும்மாயிருக்கும்போது சாத்தான் நமக்குள் பிரவேசிப்பான். சும்மாயிருக்கிற நமக்கு சாத்தான் ஏதாவது ஒரு வேலை கொடுப்பான். சாத்தானுடைய வேலைகள் எல்லாமே துன்மார்க்கமானதாகவும் அநீதியானதாகவும் இருக்கும். மனுஷன் சும்மாயிருந்தாலும் அவனுடைய மனசு சும்மாயிருக்காது. எதையாவது சிந்தித்துக்கொண்டிருக்கும். நம்முடைய மனதை நாம் நற்காரியங்களில் பயன்படுத்தவில்லையென்றால், அது தீயகாரியங்களைச் சிந்திக்க ஆரம்பித்துவிடும். தீயசிந்தனை தீயசெயலில் முடியும்.

அப்போஸ்தலர் பவுல் தெசலோனிக்கேயர் மத்தியில் சத்தியத்தைப் பிரசங்கம் செய்திருக்கிறார். அவர்களுடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் அவர்கள் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டுமென்று அவர்களுக்கு உபதேசம் செய்திருக்கிறார். ஆனால் ஒரு சிலர் அப்போஸ்தலர் சொன்ன முறைமையின்படி நடவாமல் ஒழுங்கற்று நடக்கிறார்கள். அவர்களை என்ன செய்யவேண்டுமென்று அப்போஸ்தலர் பவுல் கட்டளையிடுகிறார். "ஒழுங்கற்று நடக்கிற எந்த சகோதரனையும் நீங்கள் விட்டுவிலகவேண்டுமென்று, நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே உங்களுக்குக் கட்டளையிடுகிறோம்" (2தெச 3:6) என்று சொல்லுகிறார். அப்போஸ்தலரின் கட்டளை கர்த்தருடைய கட்டளையாகவே இருக்கிறது.

"இப்படிப்பட்டவர்கள் அமைதலோடே வேலைசெய்து, தங்கள் சொந்தச் சாப்பாட்டைச் சாப்பிடவேண்டுமென்று, நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலே அவர்களுக்குக் கட்டளையிட்டுப் புத்திசொல்லுகிறோம்" (2தெச 3:12). நம்முடைய மனதும் சரீரமும் கர்த்தருடைய கட்டளைக்குக் கீழ்ப்படியவேண்டும். கர்த்தருடைய கிருபையைப் பெற்றுக்கொண்டு, அவருடைய நாமத்திற்கு மகிமையாக, நாம் நற்கிரியைகளை நடப்பிக்கவேண்டும். கர்த்தருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படியாதவர்கள் ஒழுங்கற்று நடக்கிறவர்கள்.

அப்படிப்பட்டவர்களை என்ன செய்யவேண்டுமென்று பவுல் இங்கு ஆலோசனை சொல்லுகிறார். "மேலும், இந்த நிருபத்தில் சொல்லிய எங்கள் வசனத்துக்கு ஒருவன் கீழ்ப்படியாமற்போனால், அவனைக் குறித்துக்கொண்டு, அவன் வெட்கப்படும்படிக்கு அவனுடனே கலவாதிருங்கள். ஆனாலும் அவனைச் சத்துருவாக எண்ணாமல், சகோதரனாக எண்ணி, அவனுக்குப் புத்திசொல்லுங்கள்" (2தெச 3:14,15).

அப்போஸ்தலர் பவுல் தன்னுடைய கட்டளையை முழுசபையாருக்கும் சொல்லுகிறார். ஒழுங்கற்று நடக்கிற சகோதரரை சபையார் என்ன செய்யவேண்டுமென்று பவுல் அவர்களுக்கு ஆலோசனை சொல்லுகிறார். ஒழுங்கற்று நடக்கிறவன் கர்த்தருடைய வசனத்திற்கு கீழ்ப்படியாமல் ஜீவிக்கிறவன். அப்படிப்பட்டவன்மீது ஒழுங்கு நடவடிக்கை எடுப்பதற்கு முன்பாக, அவனுடைய ஒழுக்கக்கேடுகளைத் தீரவிசாரித்து உறுதிபண்ணிக் கொள்ளவேண்டும். அவன்மீது ஒழுங்கு நடவடிக்கை எடுப்பதற்கு நம்மிடத்தில் தகுந்த ஆதாரம் இருக்கவேண்டும்.

ஒருவன் கர்த்தருடைய வசனத்திற்குக் கீழ்ப்படியாமல் போனாலும் அவனைச் சத்துருவாக எண்ணக்கூடாது. அவனை நம்முடைய சகோதரனாகவும், சிநேகிதனாகவும் எண்ணவேண்டும். அவனுக்கு அன்போடும் கரிசனையோடும் புத்திசொல்லவேண்டும். அவனுடைய மனதில் அவன் செய்த பாவத்தைக் குறித்தும், அவனுக்கு நியமிக்கப்பட்டிருக்கிற கடமையைக் குறித்தும், அவனுக்கு உணர்த்தி புத்திசொல்லவேண்டும்.

கர்த்தருடைய வசனத்திற்கு கீழ்ப்படியாமல் போனவனுக்கு புத்திசொல்லியும் அவன் கீழ்ப்படியவில்லையென்றால், அவன் வெட்கப்படும்படிக்கு சபையார் அவனோடே கலவாதிருக்கவேண்டும். விசுவாசிகள் அவனுடைய ஒழுங்கற்ற நடக்கைகளைக் கற்றுக்கொள்ளக்கூடாது. அவனோடு கலக்கும்போது நல்ல விசுவாசிகள் மத்தியில் அவனுடைய தீயசுபாவம் பரவுவதற்கு வாய்ப்புள்ளது. ஒழுங்கற்று நடக்கிறவன் மாயையைப் பின்பற்றுகிறான். மாயையான மனுஷரைப் பின்பற்றுகிறான். அப்படிப்பட்டவர்களைப் பின்பற்றுகிறவர்களும் ஒழுங்கற்று நடப்பார்கள்.

ஒழுங்கற்று நடக்கிறவனை வெட்கப்படுத்தும்படிக்கு சபையார் அவனோடு கலவாதிருக்கவேண்டும். அவன் மனந்திருந்தவேண்டுமென்பதுதான் நம்முடைய விருப்பம். அவனுக்குப் புத்திசொல்லியும் திருந்தவில்லையென்றால், ஒருவேளை அவன் வெட்கப்படுத்தப்பட்டால் திருந்துவதற்கு வாய்ப்புள்ளது. ஆனாலும் நாம் அவனை சத்துருவாக எண்ணி வெட்கப்படுத்தக்கூடாது. சகோதரனாக எண்ணி அவனுக்குப் புத்திசொல்ல வேண்டும்.

ஒருசிலர் வெட்கப்படுத்தப்படும் போதும் திருந்தமாட்டார்கள். கடிந்துசொன்னாலும் திருந்தமாட்டார்கள். இப்படிப்பட்டவர்களில் சிலர் அன்போடு சொன்னால் திருந்துவார்கள். ஒழுங்கற்று நடக்கிறவர்களை கடிந்துகொள்ள வேண்டுமென்பது நம்முடைய விருப்பமல்ல. அவனை வெட்கப்படுத்த வேண்டுமென்பதோ, அவனோடு நாம் கலவாதிருக்க வேண்டுமென்பதோ நம்முடைய விருப்பமல்ல. அவன் மனந்திருந்தவேண்டுமென்பதே நம்முடைய விருப்பம். அவன் கர்த்தருடைய வசனத்திற்கு கீழ்ப்படியவேண்டுமென்பது தான் நம்முடைய விருப்பம். ஒழுங்கற்று நடக்கிறவனை சபையின் ஐக்கியத்திலிருந்து நீக்கிவிட்டாலும், அவனை சபையார் யாரும் சத்துருவாக எண்ணக்கூடாது.

அப்போஸ்தலர் பவுல் தெசலோனிக்கேயர் மத்தியில் ஒழுங்கற்று நடக்கவில்லை. அவர்கள் எப்படி நடக்கவேண்டும் என்பதற்கு சாட்சியாக, பவுல் அவர்களுக்கு முன்மாதிரியாய் ஜீவித்தார். தெசலோனிக்கேயரும் இன்னவிதமாய் அப்போஸ்தலரைப் பின்பற்ற வேண்டுமென்று அறிந்திருக்கிறார்கள். ஒவ்வொரு காரியத்திலும் அப்போஸ்தலர்கள் தெசலோனிக்கேயருக்கு முன்மாதிரியாக ஜீவித்திருக்கிறார்கள் *(2தெச 3:7)*.

அப்போஸ்தலர்கள் ஒருவரும் எந்த வேலையும் செய்யாமல் சும்மாயிருப்பதில்லை. இரவும் பகலும் பிரயாசத்தோடும் வருத்தத்தோடும் வேலை செய்து சாப்பிட்டார்கள். அப்போஸ்தலர்கள் ஒருவனிடத்திலும் இலவசமாய் சாப்பிடவில்லை. அவர்கள் ஒரு விசுவாசிக்கும் பாரமாயில்லை *(2தெச 3:8)*.

சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கிறவர்களுக்கு சுவிசேஷத்தினால் பிழைப்பு உண்டாக வேண்டும். தெசலோனிக்கேயர்மேல் பாரத்தை வைப்பதற்கு அப்போஸ்தலருக்கு அதிகாரமுண்டு. அப்போஸ்தலர் அவர்களுக்கு சுவிசேஷத்தைப் பிரசங்கம் செய்கிறார்கள். அவர்களுக்கு ஆவிக்குரிய நன்மைகளைச் செய்கிறார்கள். அப்போஸ்தலரிடமிருந்து ஆவிக்குரிய நன்மைகளைப் பெற்றுக்கொண்ட தெசலோனிக்கேயர், அவர்களுடைய சரீர நன்மையை விசாரிக்கவேண்டும். இது எல்லா விசுவாசிகளும் தங்களுடைய ஊழியக்காரருக்குச் செய்யவேண்டிய கடமை. விசுவாசிகள்மீது தங்களுடைய சரீரப்பிரகாரமான பாரத்தை வைப்பதற்கு ஊழியக்காரருக்கு அதிகாரமுண்டு *(2தெச 3:9).*

ஆனால் அப்போஸ்தலரோ தெசலோனிக்கேயர்மீது இப்படிப்பட்ட பாரம் எதுவும் சுமத்தவில்லை. அவர்கள்மீது மிகுந்த அன்போடிருக்கிறார்கள். தெசலோனிக்கேயர் தங்களைப் பின்பற்றும்படிக்கு, அப்போஸ்தலர்கள் அவர்களுக்கு மாதிரியாயிருந்து, இரவும் பகலும் பிரயாசத்தோடும் வருத்தத்தோடும் வேலை செய்து சாப்பிடுகிறார்கள். அப்போஸ்தலர்கள் தெசலோனிக்கேயிலுள்ள ஒருவனிடத்திலும் இலவசமாய்ச் சாப்பிடவில்லை. அவர்களில் ஒருவனுக்கும் அப்போஸ்தலர் பாரமாயிருக்கவில்லை.

வேலை செய்யாமல் சும்மாயிருக்கிறவன் என்ன செய்ய வேண்டுமென்று பவுல் கட்டளையாகச் சொல்லுகிறார். ஒருவன் வேலை செய்ய மனதில்லாதிருந்தால் அவன் சாப்பிடவும் கூடாது *(2தெச 3:10).* வேலையாள் தன் போஜனத்திற்கு பாத்திரவானாயிருக்கிறான். ஒரு வேலையும் செய்யாமல் சும்மாயிருக்கிறவனுக்கு போஜனத்திலே பங்குமில்லை. பாத்தியமுமில்லை.

நாம் சரீரப்பிரகாரமாக முடமாயிருந்தால் நம்மால் வேலை செய்ய முடியாது. மற்றபடி வேலை செய்ய முடிகிற எல்லோரும் ஏதாவது வேலை செய்து போஜனம்பண்ணவேண்டும்.

வேலை செய்ய மனதில்லாதவன் சாப்பிடக்கூடாது என்று சொல்லும்போது, அதை அப்போஸ்தலர் பவுல் கட்டளையாகச் சொல்லுகிறார். அப்போஸ்தலருடைய கட்டளை நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் கட்டளைக்குச் சமமானது. அவர்கள் கிறிஸ்துவின் கட்டளையை அப்போஸ்தல அதிகாரத்தோடு சொல்லுகிறார்கள். வேலை செய்ய மனதாயிருக்கிறவர்கள் சாப்பிடக்கூடாது. ஆகையினால் இப்படிப்பட்டவர்கள் அமைதலோடே வேலை செய்து தங்கள் சொந்தச் சாப்பாட்டைச் சாப்பிடவேண்டும். இந்தக் கட்டளையை அப்போஸ்தலர் பவுல் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினாலே அவர்களுக்கு கட்டளையிட்டு புத்தி சொல்லுகிறார் *(2தெச 3:12).*

ஒவ்வொரு மனுஷனும் நியாயமான வேலை ஏதாவது ஒன்றைச் செய்யவேண்டும். ஒரு வேலையும் செய்யவில்லையென்றால் அவனுக்குச் சாப்பாடும் தேவையில்லை. வேலை செய்ய மனதில்லாதவன் சாப்பிடவும் மனதில்லாதவனாயிருக்க வேண்டும். நம்முடைய வேலையை நாம் செய்யும்போது, நாம் அமைதலோடே வேலை செய்யவேண்டும்.

வேலை செய்வதும் அமைதலாயிருப்பதும் இரண்டு வெவ்வேறு காரியங்கள். இவ்விரண்டும் இணையும்போது மிகவும் அற்புதமான கிரியைகள் நடைபெறும். சுறுசுறுப்பாயும் இருக்கவேண்டும். அமைதலாயும் இருக்கவேண்டும். நம்முடைய சொந்த வேலையை சுறுசுறுப்பாய்ச் செய்யவேண்டும். மற்றவர்களுடைய வேலைகளில் தலையிடாமல் அமைதலாயிருக்கவேண்டும்.

விசுவாசிகள் நன்மை செய்வதிலே சோர்ந்துபோகக்கூடாது. நாம் செய்கிற வேலையில் களைப்படையக்கூடாது. வேலையை நிறுத்திவிடக்கூடாது. வேலை செய்யாமல் சும்மாயிருந்துவிடக்கூடாது. நாம் நியாயமாய்ச் செய்கிற எல்லா வேலையும் நன்மை செய்கிற வேலைதான். நமக்கு இளைப்பாறுதல் பரலோகத்தில்தான் உண்டு. தேவன் நமக்கு பரலோகத்திலே நித்திய இளைப்பாறுதலை நியமித்திருக்கிறார். அங்கு நாம் எவ்வளவு நேரம் வேண்டுமானாலும் இளைப்பாறிக்கொள்ளலாம். நாம் இப்பிரபஞ்சத்தில் இருக்கும் வரையிலும் சோர்ந்துபோகாமல் சுறுசுறுப்பாய் வேலை செய்யவேண்டும் (2தெச 3:13).

சமாதானத்தின் கர்த்தர் 2தெச. 3 : 16-18

2தெச 3:16. சமாதானத்தின் கர்த்தர் தாமே எப்பொழுதும் சகலவிதத்திலும் உங்களுக்குச் சமாதானத்தைத் தந்தருளுவாராக. கர்த்தர் உங்களனைவரோடுங் கூட இருப்பாராக.

2தெச 3:17. பவுலாகிய நான் என் கையெழுத்தாலே உங்களை வாழ்த்துகிறேன், நிருபங்கள்தோறும் இதுவே அடையாளம்; இப்படியே எழுதுகிறேன்.

2தெச 3:18. நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கிருபை உங்களனைவரோடுங்கூட இருப்பதாக. ஆமென்.

அப்போஸ்தலர் பவுல் தெசலோனிக்கேயருக்கு அப்போஸ்தல ஆசீர்வாதம் சொல்லுகிறார். அவர்களுக்காக கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினிடத்தில் ஜெபம்பண்ணுகிறார். கர்த்தர்தாமே அவர்களுக்கு எப்பொழுதும் சகலவிதத்திலும் சமாதானத்தைத் தந்தருளவேண்டுமென்று அவர்களை வாழ்த்துகிறார்.

நாம் சமாதானத்தை ஆசீர்வாதமாகச் சொல்லலாம். அல்லது சமாதானம் என்னும் ஆசீர்வாதம் நமக்கு வேண்டுமென்று விரும்பலாம். நமக்கு எப்போதுமே சமாதானம் வேண்டும். எல்லாவிதத்திலும் சமாதானம் வேண்டும். சமாதானம் பெற்றுக்கொள்வது எளிதல்ல. நாம் சமாதானத்தையே விரும்புகிறோம். நாம் விரும்புகிற சமாதானம் நமக்கு வேண்டுமென்றால், சமாதானத்தின் கர்த்தர்தாமே நமக்கு அந்தச் சமாதானத்தைத் தரவேண்டும்.

"கர்த்தராகிய இயேசுகிறிஸ்து தெசலோனிக்கேயரோடு இருப்பாராக" என்று அப்போஸ்தலர் பவுல் அவர்களை வாழ்த்துகிறார். நம்முடைய தேவன் நம்மோடு கூடயிருக்கவேண்டும். அவருடைய பிரசன்னம் நம்மோடும், நம்முடைய ஆவிக்குரிய சிநேகிதரோடும் கூடயிருக்கவேண்டும். அதுவே நமக்கு பாதுகாப்பு. அதுவே நமக்கு சந்தோஷம். தேவனுடைய பிரசன்னம் நம்மோடு கூடயிருக்கும்போதுதான் பரலோகம் நமக்கு பரலோகமாகயிருக்கும். இப்பிரபஞ்சத்தில் தேவனுடைய பிரசன்னம் நம்மோடு கூடயிருக்கும்போது, இப்பிரபஞ்சமே நமக்கு பரலோகத்தைப் போல இருக்கும் (2தெச 3:16).

"நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் கிருபை தெசலோனிக்கேயர் அனைவரோடுங் கூடயிருப்பதாக" என்று சொல்லி பவுல் அவர்களை வாழ்த்துகிறார். நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் கிருபையினாலே, நமக்கு எப்பொழுதும் சகலவிதத்திலும் சமாதானமுண்டாயிருக்குமென்று நம்புகிறோம். இயேசுகிறிஸ்துவின் கிருபையினாலே தேவனுடைய பிரசன்னத்தை அனுபவிக்கிறோம். இயேசுகிறிஸ்துவின் இதே கிருபையே நம் எல்லோருக்கும் சந்தோஷம் தருகிறது. தேவகிருபையில்லையென்றால் நமக்கு ஒன்றுமில்லை. ஆகையினால் நம்முடைய ஜெபத்தில் தேவகிருபைக்காக கருத்தாய் ஜெபிக்கவேண்டும் (2தெச 3:18).